உ

சேரர்பரம்பரையினராகிய

ஐயனாரிதனாரருளிச்செய்த

புறப்பொருள்வெண்பாமாலை

மூலம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 MAY 1927
MADRAS

பதிப்பாசிரியர்

சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்

வெளியிடுவோர்:

வாவிள்ள

இராமசாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்,

292, எஸ்பிளனேட்,

சென்னை.

அக்ஷய பங்குனி] —— [விலை அணா 7

P31, E

N27

PRINTED AT THE SRI RAMA PRESS,
15, BROADWAY, MADRAS.

59397

இப்புத்தகத்திலடங்கியவை

1. நூன் முகம் i
2. புறப்பொருள் வெண்பாமாலை மூலம் ... 1–113
   கடவுள் வாழ்த்து 1
   சிறப்புப் பாயிரம் 1
   (1) வெட்சிப் படலம் 2
   (2) கரந்தைப் படலம் 8
   (3) வஞ்சிப் படலம் 13
   (4) காஞ்சிப் படலம் 21
   (5) நொச்சிப் படலம் 28
   (6) உழிஞைப் படலம் 31
   (7) தும்பைப் படலம் 41
   (8) வாகைப் படலம் 49
   (9) பாடாண் படலம் 60
   (10) பொதுவியற் படலம் 76
   சிறப்பிற் பொதுவியற் பால 80
   காஞ்சிப் பொதுவியற் பால ... 85
   முல்லைப் பொதுவியற் பால 87
   (11) கைக்கிளைப் படலம்... 90
   ஆண்பாற் கூற்று 90
   பெண்பாற் கூற்று 93
   (12) பெருந்திணைப் படலம் 97
   பெண்பாற் கூற்று 97
   இருபாற் பெருந்திணை 103
ஒழிபு 109

REGISTRAR OF BOOKS
23 MAY 1927
MADRAS

கடவுள் துணை

நான்முகம்

புறப்பொருள் வெண்பாமாலையை இயற்றிய புலவர் ஐயனாரிதனார் என்பவர்; இவர் சேரர் மரபினர்; இஃது ஆசிரியர் அகத்தியனார் மாணவர் பன்னிருவரானும் அருளிச் செய்யப்பட்ட பன்னிரு படலம் என்னும் நூலின் வழி நூலென்பது நச்சினார்க்கினியர் எழுதிய சிறப்புரையான் விளங்கற் பாலது; வெட்சி முதல் பெருந்திணை இறுவாயாகப் பன்னிரண்டு படலங்களை யுடையது; புறப்பொருளின் இயல்பைச் சூத்திரமாகக் கூறுவது; இதன்கண் இலக்கியமாகவரும் வெண்பாக்கள் சொற்சுவை பொருட்சுவை துதைந்து நிற்பன; இச்சிறப்புப் பற்றி இது வெண்பாமாலை எனவும் வழங்கும்.

'அகமாவது, ஒத்த அன்பினராகிய தலைவனும் தலைவியும் தம்முட் கூடுகின்ற காலத்துப் பிறந்து, அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரானும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் எப்பொழுதும் உள்ளத்துணர்வாலேயே அனுபவிக்கப்படும் இன்பம்; இன்பம்பற்றி அகத்தே நிகழும் ஒழுக்கத்தை அகமென்றது ஆகுபெயர்.' (அகம்-உள்)

'புறமாவது மேற்கூறிய ஒத்த அன்புடையார் தாமே யன்றி எல்லாராலும் அனுபவித்து உணரப்பட்டு இஃது இவ்வாறிருந்த தெனப் பிறர்க்குக் கூறப்படுவதாய் அறனும் பொருளு மென்னும் இயல்பினை யுடையதாய்ப் புறத்தே நிகழும் ஒழுக்கம்; அறனும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைப் புறமென்றது ஆகுபெயர்.' (புறம்—வெளி)

இந்நூலால் பண்டைக்கால அரசர் போர்முறைகள் தமிழர் வழக்க வொழுக்கங்கள் முதலியன புலப்படும்.

இந்நூலாசிரியர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது கடவுள் வாழ்த்துச் செய்யுட்களால் வெளிப்படையாக அறியப்படும்; இவர் வாக்கு நயத்தை ஒவ்வோர் வெண்பாவினும் பார்க்கக் காணலாம்.

'கன்னின்றான் எந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தார் என்னையர்—பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன்மேலோடி
எய்போற் கிடந்தானென் ஏறு.'

மணி. திருநாவுக்கரசு முதலியார்.

உ

திருச்சிற்றம்பலம்

புறப்பொருள் வெண்பாமாலை

கடவுள் வாழ்த்து

நடையூறு சொன்மடந்தை நல்குவதும் நம்மேல்
இடையூறு நீங்குவது மெல்லாம்—புடையூறுஞ்
சேனைமுகத் தாளிரியச் சீறுமுகத் தூறுமதத்து
ஆனைமுகத் தானைநினைத் தால். 1

கண்ணவனைக் காண்க இரு காதவனைக் கேட்கவாய்ப்
பண்ணவனைப் பாட பதஞ்சூழ்க—எண்ணிறைந்த
நெய்யொத்து நின்றானை நீலமிடற் றானையென்
கையொத்து நேர்கூப்பு க. 2

சிறப்புப் பாயிரம்

மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலம் பழிப்பின் றுணர்ந்தோன்
ஓங்கிய சிறப்பின் உலகமுழு தாண்ட
வாங்குவில் தடக்கை வானவர் மருமான்
ஐயன் ஆரிதன் அகலிடத் தவர்க்கு
மையறு புறப்பொருள் வழாவின்று விளங்க
வெண்பா மாலை எனப்பெயர் நிறீஇப்
பண்புற மொழிந்தனன் பான்மையில் தெரிந்தே.

முதலாவது

வெட்சிப் படலம்

சூத்திரம் 1

வெட்சி, வெட்சி யரவம் விரிச்சி செலவு
வேயே புறத்திறை ஊர்கொலை ஆகோள்
பூசன் மாற்றே புகழ்சுரத் துய்த்தல்
தலைத்தோற் றம்மே தந்துநிறை பாதீடு
உண்டாட் டியர்கொடை புலனறி சிறப்பே
பிள்ளை வழக்கே பெருந்துடி நிலையே
கொற்றவை நிலையே வெறியாட் டுளப்பட
எட்டிரண் டேனை நான்கொடு தொகைஇ
வெட்சியும் வெட்சித் துறையு மாகும்.

வெட்சி:—

வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியுஞ்
சென்றி கன்முனை யாதந் தன்று.

அவற்றுள்,
மன்னுறுதொழில் வருமாறு:—

வ-று. மண்டும் எரியுள் மரந்தடிந் திட்டற்றாக்
கொண்ட கொடுஞ்சிலையன் கோல்தெரியக்—கண்டே
அடையார் முனையலற ஐயிலைவேற் காளை
விடையாயங் கொளஃகென்றான் வேந்து. 1

தன்னுறு தொழில் வருமாறு:—

வ-று. அறாஅ நிலைச்சாடி யாடுறு தேறல்
மறாஅன் மழைத்தடங் கண்ணி—பொறாஅன்

கடுங்கண் மறவன் கழல்புனைந்தான் காலை
நெடுங்கடைய நேரார் நிரை. 2

வெட்சியரவம்:—

கலவார் முனைமேற்
செலவமர்ந் தன்று.

வ-று. நெடிபடு கானத்து நீள்வேல் மறவர்
அடிபடுத் தாரதர் செல்வான்—துடிபடுத்து
வெட்சி மலைய விரவார் மணிநிரைக்
கட்சியுட் காரி கலுழும். 3

விரிச்சி:—

வேண்டிய பொருளின் விளைவுநன் கறிதற்கு
ஈண்டிருள் மாலைச் சொல்லோர்த் தன்று.

வ-று. எழுவணி சீறூர் இருள்மாலை முன்றிற்
குழுவினங் கைகூப்பி நிற்பத்—தொழுவிற்
குடக்கள்நீ கொண்டுவா வென்றுள் குனிவில்
தடக்கையாய் வென்றி தரும். 4

செலவு:—

வில்லே ருழவர் வேற்றுப் புலம் உனிக்
கல்லேர் கானங் கடந்துசென் றன்று.

வ-று. கூற்றினத் தன்னார் கொடுவில் இடனேந்திப்
பாற்றினம் பின்படா முன்படர்ந்—தேற்றினம்
நின்ற நிலைகருதி யேகினர் நீள்கழைய
குன்றங் கொடுவில் லவர். 5

வேய்:—

பற்றார் தம்முனைப் படுமணி யாயத்து
ஒற்றா ராய்ந்த வகையுரைத் தன்று.

வ-று. நிலையு நிரையு நிரைப்புறத்து நின்ற
சிலையுஞ் செருமுனையுள் வைகி—இலைபுனைந்த
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோய் சென்றறிந்து
நள்ளிருட்கண் வந்தார் நமர். 6

புறத்திறை:—

நோக்கருங் குறும்பின் நூழையும் வாயிலும்
போக்கற வளைஇப் புறத்திறுத் தன்று.

வ-று. உய்ந்தொழிவார் ஈங்கில்லை ஊழிக்கட் டீயேபோல்
முந்தமரு ளேற்றார் முரண்முருங்கத்—தந்தமரின்
ஒற்றினன் ஒற்றி உரவோர் குறும்பினைச்
சுற்றினர் போகாமற் சூழ்ந்து. 7

ஊர்கொலை:—

விரைபரி கடவி வில்லுடை மறவர்
குரையழல் நடப்பக் குறும்பெறிந் தன்று.

வ-று. இகலே துணையா எரிதவழச் சீறிப்
புகலே அரிதென்னார் புக்குப்—பகலே
தொலைவிலார் வீழத் தொடுகழல் ஆர்ப்பக்
கொலைவிலார் கொண்டார் குறும்பு. 8

ஆகோள்:—

வென்றார்த்து விறன்மறவர்
கன்றோடு மாதழீ இயன்று.

வ-று. கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தால்
நெடுவரை நீள்வேய் நரலும்—நடுவூர்க்
கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற
நிணநிரை வேலார் நிலை. 9

பூசன்மாற்று:—

கணம்பிறங்கக் கைக்கொண்டார்
பிணம்பிறங்கப் பெயர்த்திட்டன்று.

வ-று. சூழ்ந்த நிரைபெயரச் சுற்றித் தலைக்கொண்டார்
வீழ்ந்தனர் வீழ்ந்தார் விடக்குணியத்—தாழ்ந்த
குலவுக் கொடுஞ்சிலைக்கைக் கூற்றனையார் எய்த
புலவுக் கணைவழிபோய்ப் புள். 10

சுரத்துய்த்தல்:—

அருஞ்சுரத்தும் அகன்கானத்தும்
வருந்தாமல் நிரையுய்த்தன்று.

வ-று. புன்மேய்ந் தசைஇப் புணர்ந்துடன் செல்கென்னும்
வின்மே லசைஇயகை வெல்கழலான்—தன்மேற்
கடுவரை நீரிற் கடுத்துவரக் கண்டு
நெடுவரை நீழல் நிரை. 11

தலைத்தோற்றம்:—

உரவெய்யோன் இனந்தழீஇ
வரவுணர்ந்து கிளைமகிழ்ந்தன்று.

வ-று. மொய்யணல் ஆனிரை முன்செல்லப் பின்செல்லும்
மையணற் காளை மகிழ்துடி—கையணல்
வைத்த எயிற்றியர் வாட்கண் இடனாட
உய்த்தன் றுவகை ஒருங்கு. 12

தந்துநிறை:—

வார்வலந்த துடிவிம்ம
ஊர்புகல நிரையுய்த்தன்று.

வ-று. தண்டா விருப்பினள் தன்னை தலைமலைந்த
வண்டார் கமழ்கண்ணி வாழ்கென்று—கண்டாள்

அணிநிரை வாள்முறுவல் அம்மா எயிற்றி
மணிநிரை மல்கிய மன்று. 13

பாதீடு:—

கவர்கணைச் சுற்றங் கவர்ந்த கணநிரை
அவரவர் வினைவயின் அறிந்தீந் தன்று.

வ-று. ஒள்வாள் மலைந்தார்க்கும் ஒற்றாய்ந் துரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும்—விள்வாரை
மாறட்ட வென்றி மறவர்தஞ் சீறூரிற்
கூறிட்டார் கொண்ட நிரை. 14

உண்டாட்டு:—

தொட்டிமிழுங் கழன்மறவர்
மட்டுண்டு மகிழ்தூங்கின்று.

வ-று. இளிகொண்ட தீஞ்சொல் இளமா எயிற்றி
களிகொண்ட நோக்கங் கவற்றத்—தெளிகொண்ட
வெங்கள் மலிய விளிவதுகொல் வேற்றூர்மேற்
செங்கண் மறவர் சினம். 15

கொடை:—

ஈண்டியநிரை யொழிவின்றி
வேண்டியோர்க்கு விரும்பீசின்று.

வ-று. அங்கட் கிணையன் துடியன் விறலிபாண்
வெங்கட்கு வீசும் விலையாகும்—செங்கட்
செருச்சிலையா மன்னர் செருமுனையிற் சீறி
வரிச்சிலையால் தந்த வளம். 16

புலனறிசிறப்பு:—

வெம்முனைநிலை யுணர்த்தியோர்க்குத்
தம்மினுமிகச் சிறப்பீந்தன்று.

வ-று. இறுமுறை எண்ணு திரவும் பகலுஞ்
செறுமுனையுட் சென்றறிந்து வந்தார்—பெருமுறையின்
அட்டுக் கனலும் அயில்வேலோய் ஒன்றிரண்டு
இட்டுக் கொடுத்தல் இயல்பு. 17

பிள்ளை வழக்கு:—

பொய்யாது புள்மொழிந்தார்க்கு
வையாது வழக்குரைத்தன்று.

வ-று. புல்லார் நிரைகருதி யாஞ்செல்லப் புள்நலம்
பல்லார் அறியப் பகர்ந்தார்க்குச்—சொல்லாற்
கடஞ்சுட்ட வேண்டா கடுஞ்சுரையால் நான்கு
குடஞ்சுட் டினத்தாற் கொடு. 18

துடிநிலை:—

தொடுகழன் மறவர் தொல்குடி மரபிற்
படுகண் இமிழ்துடிப் பண்புரைத் தன்று.

வ-று. முந்தை முதல்வர் துடியர் இவன்முதல்வர்
எந்தைக்குத் தந்தை இவனெனக்கு—வந்த
குடியொடு சோடா மரபினேற் கின்னும்
வடியுறு தீந்தேறல் வாக்கு. 19

கோற்றவை நிலை:—

ஒளியின்நீங்கா விளற்படையோள்
அளியின்நீங்கா அருளுரைத்தன்று.

வ-று. ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி மலிபடைக் கொற்றவை—மீளி
அரண்முருங்க ஆகோள் கருதின் அடையார்
முரண்முருங்கத் தான்முந் துறும். 20

வெறியாட்டு:—

வாலிழையோர் வினைமுடிய
வேலனொடு வெறியாடின்று.

வ-று. காணில் அரனுங் களிக்குங் கழன்மறவன்
பூணிலங்கு மென்முலைப் போதரிக்கண்—வாணுதல்
தான்முருகு மெய்ந்நிறீஇத் தாமம் புறந்திளைப்ப
வேல்முருகற் காடும் வெறி. 21

இரண்டாவது

கரந்தைப் படலம்

சூத்திரம் 2

கதமலி கரந்தை கரந்தை யரவம்
அதரிடைச் செலவே அரும்போர் மலைதல்
புண்ணொடு வருதல் போர்க்களத் தொழிதல்
ஆளெறி பிள்ளை பிள்ளைத் தெளிவே
பிள்ளை யாட்டொடு கையறு நிலையே
நெடுமொழி கூறல் பிள்ளைப் பெயர்ச்சி
வேத்தியல் மலிபே மிகுகுடி நிலையென
அருங்கலை உணர்ந்தோர் அவைபதி னொன்றும்
கரந்தையுங் கரந்தைத் துறையும் என்ப.

கரந்தை:—

மலைத்தெழுந்தோர் மறஞ்சாயத்
தலைக்கொண்ட நிரைபெயர்த்தன்று.

வ-று. அழுங்கல்நீர் வையகத் தாருயிரைக் கூற்றம்
விழுங்கியபின் வீடுகொண் டற்றாற்-செழுங்குடிகள்
தாரார் கரந்தை தலைமலைந்து தாங்கோடல்
நேரார்கைக் கொண்ட நிரை. 1

கரந்தையரவம்:—

நிரைகோள் கேட்டுச் செய்தொழி லொழிய
விரைவனர் குழூஉம் வகையுரைத் தன்று.

வ-று. காலார் கழலார் கடுஞ்சிலையார் கைக்கொண்ட
வேலார் வெருவந்த தோற்றத்தார்—காலன்
கிளர்ந்தாலும் போல்வார் கிணைப்பூசல் கேட்டே
உளர்ந்தார் நிரைப்பெயர்வு முண்டு. 2

அதரிடைச்செலவு:—

ஆற்று ரொழியக் கூற்றெனச் சினைஇப்
போற்றார் போகிய நெறியிடை யேகின்று.

வ-று. சங்குங் கருங்கோடுந் தாழ்பீலிப் பல்லியமும்
எங்கும் பறையோ டெழுந்தார்ப்ப—வெங்கல்
அழற்சுரந் தாம்படர்ந்தார் ஆன்சுவட்டின் மேலே
நிழற்கதிர்வேல் மின்ன நிரைத்து. 3

போர்மலைதல்:—

வெட்சி யாரைக் கண்ணுற்று வளைஇ
உட்குவரத் தாக்கி உறழ்செருப் புரிந்தன்று.

வ-று. புலிக்கணமுஞ் சீயமும் போர்க்களிறும் போல்வார்
வலிச்சினமு மானமுந் தேசும்—ஒலிக்கும்
அருமுனை வெஞ்சுரத் தான்பூசற் கோடிச்
செருமலைந்தார் சீற்றஞ் சிறந்து. 4

புண்ணொடுவருதல்:—

மண்ணொடு புகழ்நிறீஇப்
புண்ணொடு தான்வந்தன்று.

வ-று. வெங்குருதி மல்க விழுப்புண் ணுகுதொறூஉம்
இங்குலிகஞ் சோரும் வரையேய்க்கும்—பைங்கண்
இனம்போக்கி நின்றார் இகல்வாட்டி வேந்தன்
மனம்போல வந்த மகன். 5

போர்க்களத்தொழிதல்:—

படைக்கோடா விறன்மறவரைக்
கடைக்கொண்டு களத்தொழிந்தன்று.

வ-று. உரைப்பின் அதுவியப்போ ஒன்னார்கைக் கொண்ட
நிரைப்பின் நெடுந்தகை சென்றான்—புரைப்பின்று
உளப்பட்ட வாயெல்லாம் ஒள்வாள் கவரக்
களப்பட்டான் தோன்றான் கரந்து. 6

ஆளெறிபிள்ளை:—

வருவாரை எதிர்விலக்கி
ஒருதானாகி யாளெறிந்தன்று.

வ-று. பிள்ளை கடுப்பப் பிணம்பிறங்க வாளெறிந்து
கொள்ளைகொள் ஆயந் தலைக்கொண்டார்—எள்ளிப்
பொருதழிந்து மீளவும் பூங்கழலான் மீளான்
ஒருதனியே நின்றான் உளன். 7

பிள்ளைத்தெளிவு:—

கண்மகிழ்ந்து துடிவிம்மப்
புண்மகிழ்ந்து புகன்றாடின்று.

வ-று. மேவார் உயிருணங்க மேன்முடித்த பிள்ளையன்
பூவாள் உறைகழியாப் போர்க்களத்துள்—ஓவான்
துடியிரட்டி விம்மத் தொடுகழலார் முன்னின்று
அடியிரட்டித் திட்டாடும் ஆட்டு. 8

பிள்ளையாட்டு:—

கூடலர்குடர் மாலைசூட்டி
வேல்திரித்து விரும்பியாடின்று.

வ-று. மாட்டிய பிள்ளை மறவர் நிறந்திறந்து
கூட்டிய வெஃகங் குடர்மாலை—சூட்டியபின்
மாறிரியச் சீறி நுடங்குவான் கைக்கொண்ட
வேறிரிய விம்முந் துடி. 9

கையறுநிலை:—

வெருவரும் வாளமர் விளிந்தோற் கண்டு
கருவி மாக்கள் கையற வுரைத்தன்று.

வ-று. நாப்புலவர் சொன்மாலை நண்ணார் படையுழக்கித்
தாப்புலி ஒப்பத் தலைக்கொண்டான்—பூப்புனையும்
நற்குலத்துள் தோன்றிய நல்லிசையாழ்த் தொல்புலவீர்
கற்கொலோ சோர்ந்திலஎங் கண். 10

நெடுமொழிகூறல்:—

மன்மேம் பட்ட மதிக்குடை யோற்குத்
தன்மேம் பாடு தானெடுத் துரைத்தன்று.

வ-று. ஆளமர் வெள்ளம் பெருகின் அதுவிலக்கி
வாளொடு வைகுவேன் யானாக—நாளும்

கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோய் ஈயப்
பிழிமகிழ் உண்பார் பிறர். 11

பிள்ளைப்பெயர்ச்சி:—

போர்தாங்கிப் புள்விலங்கியோனைத்
தார்வேந்தன் தலையளித்தன்று.

வ-று. பிணங்கமருட் பிள்ளை பெயர்ப்பப் பெயராது
அணங்கனூர்செய் தாளெறிதல் நோக்கி—வணங்காச்
சிலையளித்த தோளான் சினவிடலைக் கன்றே
தலையளித்தான் தண்ணடையுந் தந்து. 12

வேத்தியல்மலிபு:—

தோள்வலிய வயவேந்தனை
வாள்வலிமறவர் சிறப்புரைத்தன்று.

வ-று. அங்கையுள் நெல்லி அதன்பயம் ஆதலாற்
கொங்கலர் தாரான் குடைநிழற்கீழ்த்—தங்கிச்
செயிர்வழங்கும் வாளமருட் சென்றடையார் வேல்வாய்
உயிர்வழங்கும் வாழ்க்கை யுறும். 13

குடிநிலை:—

மண்திணி ஞாலத்துத் தொன்மையும் மறனுங்
கொண்டு பிறாறியுங் குடிவர வுரைத்தன்று.

வ-று. பொய்யகல நாளும் புகழ்விளைத்தல் என்வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொலிநீர்—கையகலக்
கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி. 14

மூன்றாவது

வஞ்சிப் படலம்

சூத்திரம் 3

வாடா வஞ்சி வஞ்சி யரவங்
கூடார்ப் பிணிக்குங் குடைநிலை வாணிலை
கொற்றவை நிலையே கொற்ற வஞ்சி
குற்றமில் சிறப்பிற் கொற்ற வள்ளை
பேராண் வஞ்சி மாராய வஞ்சி
நெடுமொழி வஞ்சி முதுமொழி வஞ்சி
உழபுல வஞ்சி மழபுல வஞ்சி
கொடையின் வஞ்சி குறுவஞ் சியே
ஒருதனி நிலையொடு தழிஞ்சி பாசறை
பெருவஞ் சியே பெருஞ்சோற்று நிலையொடு
நல்லிசை வஞ்சியென நாட்டினர் தொகுத்த
எஞ்சாச் சீர்த்தி இருபத் தொன்றும்
வஞ்சியும் வஞ்சித் துறையு மாகும்.

வஞ்சி:—

வாடாவஞ்சி தலைமலைந்து
கூடார்மண் கொளல்குறித்தன்று.

வ-று. செங்கண் மழவிடையில் தண்டிச் சிலைமறவர்
வெங்கண் மகிழ்ந்து விழவமர—அங்குழைய
வஞ்சி வணங்கார் வணக்கிய வண்டார்ப்பக்
குஞ்சி மலைந்தானெங் கோ. 1

வஞ்சியரவம்:—

வள்வார் முரசமொடு வயக்களிறு முழங்க
ஒள்வாள் தானை உருத்தெழுந் தன்று.

வ-று. பௌவம் பணைமுழங்கப் பற்றார்மண் பாழாக
வெளவிய வஞ்சி வலம்புனையச்—செவ்வேல்
ஒளிறும் படைநடுவண் ஊழித்தீ யன்ன
களிறுங் களித்ததிருங் கார். 2

குடைநிலை:—

பெய்தாமஞ் சுரும்பிமிரப் பெரும்புலவர் புகழ்பாடக்
கொய்தார் மன்னவன் குடைநாட் கொண்டன்று.

வ-று. முன்னர் முரசிரங்க மூரிக் கடற்றானைத்
துன்னருந் துப்பிற் றொழுதெழா—மன்னர்
உடைநாள் உலந்தனவால் ஓதநீர் வேலிக்
குடைநாள் இறைவன் கொள. 3

வாணிலை:—

செற்றார்மேற் செலவமர்ந்து
கொற்றவா ணாட்கொண்டன்று.

வ-று. அறிந்தவர் ஆய்ந்தநாள் ஆழித்தேர் மன்னன்
எறிந்தில கொள்வாள் இயக்கம்—அறிந்திகலிப்
பின்பகலே யன்றியும் பேணார் அகநாட்டு
நன்பகலுங் கூகை நகும். 4

கொற்றவை நிலை:—

நீடோளான் வென்றிகொள்கென நிறைமண்டை வலனுயரிக்
கூடாரைப் புறங்காணுங் கொற்றவைநிலை யுரைத்தன்று.

வ-று. அணங்குடை நோலை பொரிபுழுக்கல் பிண்டி
நிணங்குடர் நெய்த்தோர் நிறைத்துக்—கணம்புகலக்
கையிரிய மண்டைக் கணமோடி காவலற்கு
மொய்யிரியத் தான்முந் துறும். 5

இதுவுமது:—

மைந்துடை யாடவர் செய்தொழில் கூறலும்
அந்தமில் புலவர் அதுவென மொழிப.

வ-று. தமருட் டலையாதல் தார்தாங்கி நிற்றல்
எமருள்யாம் இன்னமென் றெண்ணல்—அமரில்
முடுகழலில் முந்துறுதல் முல்லைத்தார் வேந்தன்
தொடுகழல் மைந்தர் தொழில். 6

கொற்றவஞ்சி:—

வையகம் வணங்க வாளோச் சினனெனச்
செய்கழல் வேந்தன் சீர்மிகுத் தன்று.

வ-று. அழலடைந்த மன்றத் தலந்தயரா நின்றார்
நிழலடைந்தே நின்னையென் றேத்திக்—கழலடையச்
செற்றங்கொண் டாடிச் சிலைத்தெழுந்தார் வீந்தவியக்
கொற்றங்கொண் டெஃகுயர்த்தான் கோ. 7

கொற்றவள்ளை:—

மன்னவன் புகழ்கிளந்து
ஒன்னார்நா டழிபிரங்கின்று.

வ-று. தாழார மார்பினன் தாமரைக்கண் சேந்தனவாற்
பாழாய்ப் பரிய விளிவதுகொல்—யாழாய்ப்
புடைத்தேன் இமிர்கண்ணிப் பூங்கட் புதல்வர்
நடைத்தேர் ஒலிகறங்கும் நாடு. 8

பேராண்வஞ்சி:—

கேளல்லார் முனைகெடுத்த
மீளியாளர்க்கு மிகவுய்த்தன்று.

வ-று. பலிபெறு நன்னகரும் பள்ளி யிடனும்
ஒலிகெழு நான்மறையோர் இல்லும்—நலிவொரீஇப்
புல்லார் இரியப் பொருதார் முனைகெடுத்த
வில்லார்க் கருள்சுரந்தான் வேந்து. 9

இதுவுமது:—

அருந்திறை யளப்ப ஆறிய சினத்தொடு
பெரும்பூண் மன்னவன் பெயர்தலும் அதுவே.

வ-று. கூடி முரசிரங்கக் கொய்யுளைமா முன்உகளப்
பாடி பெயர்ந்திட்டான் பல்வேலான்—கோடி
நிதியந் திறையளந்தார் நேராரும் தன்கீழ்
முதியமென் றூறி முரண். 10

மாராயவஞ்சி:—

மறவேந்தனிற் சிறப்பெய்திய
விறல்வேலோர் நிலையுரைத்தன்று.

வ-று. நேராரம் பூண்ட நெடுந்தகை நேர்கழலான்
சேரார் முனைநோக்கிக் கண்சிவப்பப்—போரார்
நறவேய் கமழ்தெரியல் நண்ணார் எறிந்த
மறவேல் இலைமுகந்த மார்பு. 11

நெடுமொழிவஞ்சி:—

ஒன்னுதார் படைகெழுமித்
தன்னுண்மை யெடுத்துரைத்தன்று.

வ-று. இன்னர் எனவேண்டா என்னோ டெதிர்சீறி
முன்னர் வருக முரணகலும்—மன்னர்
பருந்தார் படையமருட் பல்லார் புகழ
விருந்தா யடைகுறுவார் விண். 12

முதுமொழிவஞ்சி:—

தொல்மரபின் வாட்குடியின்
முன்னோனது நிலைகிளந்தன்று.

வ-று. குளிறு முரசங் குணில்பாயக் கூடார்
ஒளிறுவாள் வெள்ளம் உழக்கிக்—களிறெறிந்து
புண்ணொடு வந்தான் புதல்வற்குப் பூங்கழலோய்
தண்ணடை நல்கல் தகும். 13

உழபுலவஞ்சி:—

நேராதார் வளநாட்டைக்
கூரெரி கொளீஇயன்று.

வ-று. அயிலன்ன கண்புதைத் தஞ்சி யலறி
மயிலன்னார் மன்றம் படரக்—குயிலகவ
ஆள்திரிய வண்டிமிருஞ் செம்மல் அடையார்நாட்
டூடெரியுள் வைகின வூர். 14

மழபுலவஞ்சி:—

கூடார்முனை கொள்ளைசாற்றி
வீடறக்கவர்ந்த வினைமொழிந்தன்று.

வ-று. களமர் கதிர்மணி காலேகஞ் செம்பொன்
வளமனை பாழாக வாரிக்—கொளல்மலிந்து
கண்ணார் சிலையார் கவர்ந்தார் கழல்வேந்தன்
நண்ணார் கிளையலற நாடு. 15

கோடைவஞ்சி:—

நீடவுங் குறுகவும் நிவப்பவுந் தூக்கிப்
பாடிய புலவர்க்குப் பரிசி னீட்டின்று.

வ-று. சுற்றிய சுற்ற முடன்மயங்கித் தம்வயிறு
எற்றி மடவார் இரிந்தோட—முற்றிக்
குரிசில் அடையாரைக் கொண்டகூட் டெல்லாம்
பரிசில் முகந்தன பாண். 16

குறுவஞ்சி:—

மடுத்தெழுந்த மறவேந்தர்க்குக்
கொடுத்தளித்துக் குடியோம்பின்று.

வ-று. தாட்டாழ் தடக்கைத் தனிமதி வெண்குடையான்
வாட்டானை வெள்ளம் வரவஞ்சி—மீட்டான்
மலையா மறமன்னன் மால்வரையே போலுங்
கொலையானை பாய்மாக் கொடுத்து. 17

இதுவுமது:—

கட்டூரது வகைகூறினும்
அத்துறைக் குரித்தாகும்.

வ-று. அவிழ்மலர்க் கோதையர் ஆட ஒருபால்
இமிழ்முழவம் யாழோ டியம்பக்—கவிழ்மணிய
காய்கடா யானை ஒருபாற் களித்ததிரும்
ஆய்கழலான் கட்டூர் அகத்து. 18

ஒருதனிநிலை:—

பொருபடையுட் கற்சிறைபோன்று
ஒருவன்தாங்கிய நிலையுரைத்தன்று.

வ-று. வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமால் இந்நின்ற
வாடன் முதியாள் வயிற்றிடங்—கூடார்
பெரும்படை வெள்ள நெரிதரவும் பேரா
இரும்புலி சேர்ந்த இடம். 19

தழிஞ்சி:—

அழிகுநர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாக்
கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று.

வ-று. கான்படு தீயிற் கலவார்தன் மேல்வரினுந்
தான்படை தீண்டாத் தறுகண்ணன்—வான்படர்தல்
கண்ணியபின் அன்றிக் கறுத்தார் மறந்தொலைதல்
எண்ணியபின் போக்குமோ எஃகு. 20

பாசறைநிலை:—

மதிக்குடைக்கீழ் வழிமொழிந்து மன்னரெல்லாம்
[மறந்துறப்பவும்
பதிப்பெயரான் மறவேந்தன் பாசறை யிருந்தன்று.

வ-று. கரும்பொடு காய்நெற் கனையெரி யூட்டிப்
பெரும்புனல் வாய்திறந்த பின்னுஞ்—சுரும்பின்
தொகைமலிந்த தண்குவளைத் தூமலர்த்தாரான்
பகைமெலியப் பாசறையு ளான். 21

பெருவஞ்சி:—

முன்னடையார் வளநாட்டைப்
பின்னருமுடன் றெரிகொளீ இயன்று.

வ-று. பீடிலா மன்னர் நடுங்கப் பெரும்புகை
ஊடிலாய் வானத் தொளிமறைப்ப—நாடெலாம்

பின்னும் பிறங்கழல் வேய்ந்தன பெய்கழற்கால்
மன்னன் கனல மறம். 22

பெருஞ்சோற்று நிலை:—

திருந்தார் தெம்முனை தெறுகுவர் இவரெனப்
பெருஞ்சோ றுடவர் பெறுமுறை வகுத்தன்று.

வ-று. இயவர் புகழ எறிமுர சார்ப்பக்
குயவரி வேங்கை யனைய—வயவர்
பெறுமுறையாற் பிண்டங்கோ ளேவினன் பேணார்
இறுமுறையால் எண்ணி இறை. 23

நல்லிசைவஞ்சி:—

ஒன்னுதார் முனைகெடவிறுத்த
வென்வேலாடவன் விறன்மிகுத்தன்று.

வ-று. மடங்கலிற் சீறி மலைத்தெழுந்தார் மண்மேல்[போல்
இடங்கெடச் சென்றிறுத்த பின்னும்—நுடங்கெரி
வெல்லப் பெருகும் படையாற்கு வேந்தர்மேற்
செல்லப் பெருகுஞ் சினம். 24

இதுவுமது:—

இறுத்தபின் அழிபிரங்கல்
மறுத்துரைப்பினும் அத்துறையாகும்.

வ-று. குரையழல் மண்டிய கோடுயர் மாடஞ்
சுரையொடுபேய்ப் பீர்க்குஞ் சுமந்த-நிரைதிண்டேர்ப்
பல்லிசை வென்றிப்படைக்கடலான் சென்றிறுப்ப
நல்லிசை கொண்டடையார் நாடு. 25

நான்காவது
காஞ்சிப் படலம்

சூத்திரம் 4

காஞ்சி காஞ்சி யதிர்வே தழிஞ்சி
பெரும்படை வழக்கொடு பெருங்காஞ் சியே
வாள்செல வென்று குடையது செலவே
வஞ்சினக் காஞ்சி பூக்கோ ணிலையே
புகழ்த்தலைக் காஞ்சி தலைமா ராயம்
தலையொடு முடிதல் மறப்பெயர்க் காஞ்சி
மாற்றரும் பேய்நிலை பேய்க்காஞ் சியே
தொட்ட காஞ்சி தொடாக்காஞ் சியே
மன்னைக் காஞ்சி கட்காஞ் சியே
ஆஞ்சிக் காஞ்சி மகட்பாற் காஞ்சி
முனைகடி முன்னிருப் புளப்படத் தொகைஇ
எண்ணிய வகையான் இருபத் திரண்டுங்
கண்ணிய காஞ்சித் துறையென மொழிப.

காஞ்சி:—

வேஞ்சின மாற்றான் விடுதர் வேந்தன்
காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று.

வ-று. அருவரை பாய்ந்திறுதும் என்பார்பண் டின்றிப்
பெருவரைச் சீறூர் கருதிச்—செருவெய்யோன்
காஞ்சி மலையக் கடைக்கணித்து நிற்பதோ
தோஞ்செய் மறவர் தொழில். 1

காஞ்சியதிர்வு:—

மேல்வரும் படைவரல் மிகவும் ஆற்றா
வேல்வல் ஆடவன் விறன்மிகுத் தன்று.

வ-று. மன்மேல் வருமென நோக்கான் மலர்மார்பில்
வென்வேல் முகந்தபுண் வெய்துயிர்ப்பத்—தன்
பிடிக்கலும் ஆற்றாப் பெருந்தகை ஏவத் [வேல்
துடிக்கண் புலையன் தொடும். 2

தழிஞ்சி:—

பரந்தெழுதரு படைத்தானை
வரம்பிகவாமைச் சுரங்காத்தன்று.

வ-று. குலாவுஞ் சிலையார் குறும்புகொள வெஃகி
உலாவும் உழப்பொழிக வேந்தன்—கலாவும்
இனவேங்கை யன்ன இகல்வெய்யோர் காவல்
புனவேய் நரலும் புழை. 3

படைவழக்கு:—

முத்தவிர்பூண் மறவேந்தன்
ஒத்தவர்க்குப் படைவழங்கின்று.

வ-று. ஐயங் களைந்திட் டடல்வெங்கூற் றுவப்ப
ஐயிலை எஃகம் அவைபலவும்—மொய்யிடை
ஆட்கடி வெல்களிற் றண்ணல் கொடுத்தளித்தான்
வாட்குடி வன்கண் அவர்க்கு. 4

இதுவுமது:—

கொடுத்தபின்னர்க் கழன்மறவர்
எடுத்துரைப்பினும் அத்துறையாகும்.

வ-று. துன்னருந் துப்பிற் றொடுகழலார் சூழ்ந்திருப்பத்
தன்னமர் ஒள்வாளென் கைதந்தான்—மன்னற்கு
மண்ணகமோ வைகின்று மாலை நெடுங்குடைக்கீழ்
விண்ணகமும் வேண்டுங்கொல் வேந்து. 5

பெருங்காஞ்சி:—

தாங்கு திறன்மறவர் தத்தம் ஆற்றல்
வீங்கு பெரும்படையின் வெளிப்படுத் தன்று.

வ-று. வில்லார் குறும்பிடை வேறுவே றூர்த்தெழுந்த
கல்லா மறவர் கணைமாரி—ஒல்லா
வெருவி மறவேந்தர் வெல்களி றெல்லாம்
இருவி வரைபோன்ற இன்று. 6

வாள்சேலவு:—

அருமுனையான் அறைகூவினபின்
செருமுனைமேல் வாள்சென்றன்று.

வ-று. உணங்கு புலவறா ஒன்னார் குரம்பை
நுணங்கரில் வெம்முனை நோக்கி—அணங்கிய
குந்த மலியும் புரவியான் கூடாதார்
வந்தபின் செல்கென்றான் வாள். 7

குடைச்சேலவு:—

முதுகுடி மறவர் முன்னுறச் சூழக்
கொதியழல் வேலோன் குடைசென் றன்று.

வ-று. தெம்முனை தேயத் திறல்விளங்கு தேர்த்தானை
வெம்முனை வெற்றி விறல்வெய்யோன்—தம்முனை
நாட்டிப் பொறிசெறித்து நண்ணார்மேற் செல்கென்று
கூட்டிநாட் கொண்டான் குடை. 8

வஞ்சினக்காஞ்சி:—

வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப
வஞ்சினங் கூறிய வகைமொழிந் தன்று.

வ-று. இன்று பகலோன் இறவாமுன் ஒன்னாரை
வென்று களங்கொளா வேலுயர்ப்பின்—என்றும்

அரணவியப் பாயும் அடையார்முன் நிற்பேன்
முரணவிய முன்முன் மொழிந்து. 9

பூக்கோணிலை:—

காரெதிரிய கடற்றானை
போரெதிரிய பூக்கொண்டன்று.

வ-று. பருதிசெல் வானம் பரந்துருகி யன்ன
குருதியா றுவதுகொல் குன்றூர்—கருதி
மறத்திறத்தின் மாறா மறவருங் கொண்டார்
புறத்திறுத்த வேந்திரியப் பூ. 10

தலைக்காஞ்சி:—

மைந்துயரா மறங்கடந்தான்
பைந்தலைச் சிறப்புரைத்தன்று.

வ-று. விட்டிடினென் வேந்தன் விலையிடினென் இவ்வுலகில்
இட்டுரையின் எய்துவ எய்திற்றால்—ஒட்டாதார்
போர்தாங்கி மின்னும் புலவாள் உறைகழியாத்
தார்தாங்கி வீழ்ந்தான் தலை. 11

தலைமாராயம்:—

தலைகொடுவர்தான் உள்மலியச்
சிலையுடைவேந்தன் சிறப்பீந்தன்று.

வ-று. உவன்றலை யென்னும் உறழ்வின்றி ஒன்னார்
இவன்தலையென் றேத்த இயலும்—அவன்தலை
தந்தாற்கு நல்கல் வியப்போ கிளர்ந்தேத்தி
வந்தார்க்கு உவந்தீயும் வாழ்வு. 12

தலையொடுமுடிதல்:—

மண்டமருள் மாறாமைந்திற்
கொண்டான்தலையொடு கோல்வளைமுடிந்தன்று.

வ-று. கொலையானைக் கூற்றங் கொடிதே கொழுநன்
தலையானுள் தையலாள் கண்டே—முலையால்
முயங்கினாள் வாள்முகமுஞ் சேர்த்தினாள் ஆங்கே
உயங்கினாள் ஓங்கிற் றுயிர். 13

மறக்காஞ்சி:—

இலைப்பொலிதார் இகல்வேந்தன்
மலைப்பொழிய மறங்கடைஇயன்று.

வ-று. கருந்தலையும் வெண்ணிணமுஞ் செந்தடியும் ஈராப்
பருந்தோ டெருவை படர—வருந்திறல்
வேறாய மன்னர் வியப்பக் கடாயினான்
மாறா மறவன் மறம். 14

இதுவுமது:—

மண்கெழு மறவன் மாறுநிலை நோனான்
புண்கிழித்து முடியினும் அத்துறை யாகும்.

வ-று. நகையமர ராயம் நடுங்க நடுங்கான்
தொகையமர் ஓட்டிய துப்பிற்—பகைவர்முன்
நுங்கிச் சினவுதல் நோனான் நுதிவேலாற்
பொங்கிப் பரிந்திட்டான் புண். 15

பேய்நிலை:—

செருவேலோன் திறநோக்கிப்
பிரிவின்றிப் பேயோம்பின்று.

வ-று. ஆயும் அடுதிறலார்க் கன்பிலார் இல்போலுந்
தோயுங் கதழ்குருதி தோள்புடைப்பப்—பேயுங்
களம்புகலச் சீறிக் கதிர்வேல்வாய் வீழ்ந்தான்
உளம்புகல ஓம்ப லுறும். 16

பேய்க்காஞ்சி:—

பிணம்பிறங்கிய களத்துவீழ்ந்தாற்கு
அணங்காற்ற அச்சுறீஇயன்று.

வ-று. கொட்கு நிமிருங் குறுகுங் குடர்சூடிப்
பெட்ப நகும்பெயரும் பேய்மகள்—உட்கப்
புனலங் குருதிப் புலால்வாய்க் கிடந்து
கனல விழிப்பவற் கண்டு. 17

தோட்டகாஞ்சி:—

வியன்மனைவிடலை புண்காப்பத்
துயன்முலைப்பேழ்வாய்ப் பேய்தொட்டன்று.

வ-று. கொன்றுருத்த கூர்வே லவற்குறுகிக் கூரிருள்வாய்
நின்றுருத்து நோக்கி நெருப்புமிழாச்—சென்றெருத்தி
ஓட்டார் படையிடந்த ஆறுப்புண் ஏந்தகலந்
தொட்டாள் பெருகத் துயில். 18

தொடாக்காஞ்சி:—

அடலஞ்சா நெடுந்தகைபுண்
தொடலஞ்சித் துடித்துநீங்கின்று.

வ-று. ஐயவி சிந்தி நறைபுகைத் தாய்மலர்தூய்க்
கொய்யாக் குறிஞ்சி பலபாடி—மொய்யிணர்ப்
பூப்பேய் தெரியல் நெடுந்தகைபுண் யாங்காப்பப்
பேய்ப்பெண் பெயரும் வரும். 19

மன்னைக்காஞ்சி:—

வியலிடமருள விண்படர்ந்தோன்
இயல்பேத்தி அழிபிரங்கின்று.

வ-று. போர்க்குப் புணைமன் புரையோர்க்குத் தானுமன்
ஊர்க்கும் உலகிற்கும் ஓருயிர்மன்—யார்க்கும்

அறந்திறந்த வாயில் அடைத்ததால் அண்ணன்
இறந்திறந்த நீளிலை வேல். 20

கட்காஞ்சி:—

நறமலியு நறுந்தாரோன்
மறமைந்தர்க்கு மட்டீந்தன்று.

வ-று. ஒன்னு முனையோர்க் கொழிக இனித்துயில்
மன்னன் மறவர் மகிழ்தூங்கா—முன்னே
படலைக் குரம்பைப் பழங்கண் முதியாள்
விடலைக்கு வெங்கள் விடும். 21

ஆஞ்சிக்காஞ்சி:—

காதற் கணவனொடு கனையெரி மூழ்கும்
மாதர்மெல் லியலின் மலிபுரைத் தன்று.

வ-று. தாங்கிய கேள்வொடு தானும் எரிபுகப்
பூங்குழை ஆயம் புலர்கென்னும்—நீங்கா
விலாழிப் பரித்தானை வெந்திறலார் சீறூர்ப்
புலாழித் தலைக்கொண்ட புண். 22

இதுவுமது:—

மன்னுயிர் நீத்த வேலின் மனையோள்
இன்னுயிர் நீப்பினும் அத்துறை யாகும்.

வ-று. கவ்வைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன்-அவ்வேலே
அம்பிற் பிறழுந் தடங்கண் அவன்காதற்
கொம்பிற்கும் ஆயிற்றே கூற்று. 23

மகட்பாற்காஞ்சி:—

ஏந்திழையாள் தருகென்னும்
வேந்தனோடு வேறுநின்றன்று.

வ-று. அளிய கழல்வேந்தர் அம்மா அரிவை
எளியளென் றெள்ளி உரைப்பிற்—குளியாவோ
பண்போற் கிளவியிப் பல்வளையாள் வாள்முகத்த
கண்போற் பகழி கடிது. 24

முனைகடி முன்னிருப்பு:—

மன்னர்யாரையும் மறங்காற்றி
முன்னிருந்த முனைகடிந்தன்று.

வ-று. கடிகமழ் வேரிக் கடைதோறுஞ் செல்லக்
கொடிமலி கொல்களி றேவித்—துடிமகிழ
ஆர்த்திட் டமருள் அடையாரை யம்முனையிற்
பேர்த்திட்டான் பெய்கழலி னான். 25

ஐந்தாவது

நொச்சிப் படலம்

சூத்திரம் 5

நுவலருங் காப்பின் நொச்சி ஏனை
மறனுடைப் பாசி ஊர்ச்செரு வென்று
செருவிடை வீழ்தல் திண்பரி மறனே
எயிலது போரே எயிறனை அழித்தல்
அழிபடை தாங்கல் மகண்மறுத்து மொழிதலென
எச்சமின்றி எண்ணிய ஒன்பது
நொச்சித் திணையுந் துறையு மாகும்.

நொச்சி:—

எப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம்
காப்போர் சூடிய பூப்புகழ்ந் தன்று.

வ-று. ஆடரவம் பூண்டான் அழனுணச் சிறிய
கூடரணங் காப்போர் குழாம்புரையச்—சூடினர்
உச்சி மதிவழங்கும் ஓங்கு மதில்காப்பான்
நொச்சி நுதிவே லவர். 1

மறனுடைப்பாசி:—

மறப்படை மறவேந்தர்
துறக்கத்துச் செலவுரைத்தன்று.

வ-று. பாயினர் மாயும் வகையாற் பலகரப்பு
மேயினு ரேய இகல்மறவர்—ஆயினர்
ஒன்றி யவரற வூர்ப்புலத்துத் தார்தாங்கி
வென்றி யமரர் விருந்து. 2

ஊர்ச்செரு:—

அருமிளையோடு கிடங்கழியாமைச்
செருமலைந்த சிறப்புரைத்தன்று.

வ-று. வளையும் வயிரும் ஒலிப்பவாள் வீசி
இளையுங் கிடங்குஞ் சிதையத்—தளைபரிந்த
நோனர் படையிரிய நொச்சி விறன்மறவர்
ஆனர் அமர்விலக்கி யார்ப்பு. 3

செருவிடைவீழ்தல்:—

ஆழ்ந்துபடு கிடங்கோ டருமிளை காத்து
வீழ்ந்த வேலோர் விறன்மிகுத் தன்று.

வ-று. ஈண்டரில் சூழ்ந்த இளையும் எரிமலர்க்
காண்டகு நீள்கிடங்குங் காப்பாராய்—வேண்டார்
மடங்க லனைய மறவேலோர் தத்தம்
உடம்பொடு காவல் உயிர். 4

குதிரைமறம்:—

ஏமாண்ட நெடும்புரிசை
வாமானது வகையுரைத்தன்று.

வ-று. தாங்கன்மின் தாங்கன்மின் தானை விறன்மறவிர்
ஒங்கல் மதிலுள் ஒருதனிமா—ஞாங்கர்
மயிரணியப் பொங்கி மழைபோன்று மாற்றார்
உயிருணிய ஓடி வரும். 5

எயிற்போர்:—

அயிற்படையின் அரண்காக்கும்
எயிற்படைஞர் இகன்மிகுத்தன்று.

வ-று. மிகத்தாய செங்குருதி மேவரு மார்பின்
உகத்தாம் உயங்கியக் கண்ணும்—அகத்தார்
புறத்திடைப் போதந் தடல்புரிந்தார் பொங்கி
மறத்திடை மானமேற் கொண்டு. 6

எயிறனையழித்தல்:—

துணிவுடைய தொடுகழலான்
அணிபுரிசை யழிவுரைத்தன்று.

வ-று. அகத்தன வார்கழல் நோன்றாள் அரணின்
புறத்தன போரெழிற் றிண்டோள்—உறத்தழீஇத்
தோட்குரிமை பெற்ற துணைவளையார் பாராட்ட
வாட்குரிசில் வானுலகி னான். 7

அழிபடைதாங்கல்:—

இழிபுடன் றிகல்பெருக
வழிபடை யரண்காத்தன்று.

வ-று. பரிசை பலகடந்து பற்றார் எதிர்ந்தார்
எரிசெய் இகலரணங் கொண்மார்—புரிசை

அகத்தடி யுய்யாமை அஞ்சுடர்வாள் ஓச்சி
மிகத்தடிந்தார் மேனின் றவர். 8

மகண்மறுத்துமொழிதல்:—

வெம்முரணோன் மகள்வேண்ட
அம்மதிலோன் மறுத்துரைத்தன்று.

வ-று. ஒள்வாள் மறவர் உருத்தெழுந் தும்பர்நாட்
கள்வார் நறுங்கோதை காரணமாக்—கொள்வான்
மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்
கருங்கண்ணி வெண்கட்டிற் கால். 9

ஆறாவது

உழிஞைப் படலம்

சூத்திரம் 6

உழிஞை ஒங்கிய குடைநாட் கோளே
வாணாட் கோளே முரச வுழிஞை
கொற்ற வுழிஞையோ டரச வுழிஞை
கந்தழி யென்று முற்றுழி ஞையே
காந்தள் புறத்திறை ஆரெயி லுழிஞை
அருந்தோ லுழிஞை குற்றுழி ஞையொடு
கோட்புறத் துழிஞை பாசி நிலையே
ஏணி நிலையே இலங்கெயிற் பாசி
முதுவுழி ஞையே முந்தகத் துழிஞை
முற்று முதிர்வே யானைகைக் கோளே
வேற்றுப்படை வரவே உழுதுவித் திடுதல்

வாண்மண் ணுநிலையே மண்ணுமங் கலமே
மகட்பா லிகலே திறைகொண்டு பெயர்தல்
அடிப்பட விருத்தல் தொகைநிலை யுளப்பட
இழுமென் சீர்த்தி இருபத் தொன்பதும்
உழிஞை யென்மனார் உணர்ந்திசி னோரே.

உழிஞை:—

முடிமிசை யுழிஞை சூடி ஒன்னார்
கொடிநுடங் காரெயில் கொளக்கரு தின்று.

வ-று. உழிஞை முடிபுனைந் தொன்னாப்போர் மன்னர்
விழுமதில் வெல்களிறு பாயக்—கழிமகிழ்வு
எய்தாரும் எய்தி இசைநவிலுஞ் சீர்த்தியனே
கொய்தார மார்பினெங் கோ. 1

குடைநாட்கோள்:—

செற்றடையார் மதில்கருதிக்
கொற்றவேந்தன் குடைநாட்கொண்டன்று.

வ-று. நெய்யணிக செவ்வேல் நெடுந்தேர் நிலைபுகுக
கொய்யுளைமா கொல்களிறு பண்விடுக—வையகத்து
முற்றக் கடியரணம் எல்லா முரணவிந்த
கொற்றக் குடைநாட் கொள. 2

வாணாட்கோள்:—

கலந்தடையார் மதில்கருதி
வலந்தரு வாணாட்கொண்டன்று.

வ-று. வாணாட் கொளலும் வழிமொழிந்து வந்தடையாப்
பேணார் பிறைதொடும் பேமதிற்—பூணார்
அணிகொள் வனமுலையார் ஆடரங்கம் ஏறிப்
பிணிகொள்பே யாடும் பெயர்த்து. 3

முரசவுழிஞை:—

பொன்புனை உழிஞை சூடி மறியருந்துந்
திண்பிணி முரச நிலையுரைத் தன்று.

வ-று. கதிரோடை வெல்களிறு பாயக் கலங்கி
உதிரா மதிலும் உளகொல்—அதிருமாற்
பூக்கண் மலிதார்ப் புகழ்வெய்யோன் கோயிலுள்
மாக்கண் முரச மழை. 4

கோற்றவுழிஞை:—

அடையாதார் அரண்கொள்ளிய
படையோடு பரந்தெழுந் தன்று.

வ-று. வெள்வாட் கருங்கழற்கால் வெஞ்சுடர்வேல் தண்ணளியான்
கொள்வான் கொடித்தானை கொண்டெழுந்தான்-நள்ளாதார்
அஞ்சுவரு வாயில் அருமிளைக் குண்டகழி
மஞ்சிவரு ஞாயில் மதில். 5

அரசவுழிஞை:—

தொழில்காவல் மலிந்தியலும்
பொழில்காவலன் புகழ்விளம்பின்று.

வ-று. ஊக்க முரண்மிகுதி ஒன்றிய நற்சூழ்ச்சி
ஆக்கம் அவன்கண் அகலாவால்—வீக்க
நகப்படா வென்றி நலமிகு தாராற்கு
அகப்படா இல்லை அரண். 6

கந்தழி:—

மாவுடைத்தார் மணிவண்ணன்
சோவுடைத்த மறநுவலின்று.

வ-று. அன்றெறிந் தானும் இவனல் அரண்வலித்து
இன்றிவன் மாறு எதிர்வார்யார்—என்றும்
அடையார் மணிப்பூண் அடையாதார் மார்பிற்
சுடராழி நின்றெரியச் சோ. 7

முற்றுழிஞை:—

ஆடியல் அவிர்சடையான்
சூடியபூச் சிறப்புரைத்தன்று.

வ-று. மயங்காத தார்ப்பெருமை மற்றறிவார் யாரே
இயங்கரண மூன்றும் எரித்தான்—தயங்கிணர்ப்
பூக்கொள் இதழிப் புரிசெஞ் சடையானும்
மாக்கொள் உழிஞை மலைந்து. 8

காந்தள்:—

கருங்கடலுள் மாத்தடிந்தான்
செழுங்காந்தட் சிறப்புரைத்தன்று.

வ-று. குருகு பெயரிய குன்றெறிந் தானும்
உருகெழு காந்தள் மலைந்தான்—பொருகழற்
கார்கருதி வார்முரசம் ஆர்க்குங் கடற்றானைப்
போர்கருதி யார்மலையார் பூ. 9

புறத்திறை:—

மறத்துறைமலிந்து மண்டிமாற்றார்
விறற்கொடிமதிலின் புறத்திறுத்தன்று.

வ-று. புல்லார் புகலொடு போக்கொழியப் பொங்கினனுப்
பல்லார் மருளப் படைபரப்பி—ஒல்லார்
நிறத்திறுத்த வாட்டானை நேரார் மதிலின்
புறத்திறுத்தான் பூங்கழ லினன். 10

ஆரெயிலுழிஞை:—

வாஅள்மறவர் வணங்காதார்
நீஇள்மதிலின் நிலையுரைத்தன்று.

வ-று. மயிற்கணத் தன்னார் மகிழ்தேறல் ஊட்டக்
கயிற்கழலார் கண்கனல் பூப்ப—எயிற்கண்ணார்
வியப்போர் செய்தாலும் வென்றி அரிதரோ
மாயப்போர் மன்னன் மதில். 11

தோலுழிஞை:—

வென்றி யோடு புகழ்விளைக் கும்மெனத்
தொன்று வந்த தோல்மிகுத் தன்று.

வ—று. நின்ற புகழொழிய நில்லா உயிரோம்பி
இன்றுநாம் வைகல் இழிவாகும்—வென்றொளிரும்
பாண்டி னிரைதோல் பணியார் பகையரணம்
வேண்டில் எளிதென்றான் வேந்து. 12

குற்றுழிஞை:—

கருதாதார் மதிற்குமரிமேல்
ஒருதானாகி இகல்மிகுத்தன்று.

வ—று. குளிறு முரசினன் கொண்டான் அரணங்
களிறுங் கதவிறப் பாய்ந்த—ஒளிறும்
அயிற்றுப் படைந்த அணியெழு எல்லாம்
எயிற்றுப் படையால் இடந்து. 13

இதுவுமது:—

வளைஞால வயிரார்ப்ப
மிளைகடத்தலும் அத்துறையாகும்.

வ-று. அந்தரந் தோயும் அமையோங் கருமிளை
மைந்தர் மறிய மறங்கடந்து—பைந்தார்
விரைமார்பில் வில்நால வெங்கணை தூவார்
வரைமார்பில் வைகின வாள். 14

இதுவுமது:—

பாடருந்தோற் படைமறவர்
ஆடலொடடையினும் அத்துறையாகும்.

வ-று. நிரைபொறி வாயில் நெடுமதிற் சூழி
வரைபுகு புள்ளினம் மான—விரைபடைந்தார்
வேலேந்து தானை விறலோன் விறன்மறவர்
தோலேந்தி ஆடல் தொடர்ந்து. 15

புறத்துழிஞை:—

விண்தோயும் மிளைகடந்து
குண்டகழிப் புறத்திறுத்தன்று.

வ-று. கோள்வாய் முதலைய குண்டகழி நீராக
வாள்வாய் மறவேந்தன் வந்திறுத்தான்—நீள்வாயில்
ஓங்கல் அரணத் தொளிவளையார் வெய்துயிர்ப்ப
ஆங்கொல் அரிய அமர். 16

பாசிநிலை:—

அடங்காதார் மிடல்சாயக்
கிடங்கிடைப் போர்மலைந்தன்று.

வ-று. நாவாயுந் தோணியும் மேல்கொண்டு நள்ளாதார்
ஓவார் விலங்கி உடலவும்—பூஆர்
அகழி பரந்தொழுகும் அங்குருதிச் சேற்றுப்
பகழிவாய் வீழ்ந்தார் பலர். 17

ஏணிநிலை:—

தொடுகழன் மறவர் துன்னித் துன்னார்
இடுசூட்டிஞ்சியின் ஏணிசாத் தின்று.

வ-று. கற்பொறியும் பாம்புங் கனலுங் கடிகுரங்கும்
விற்பொறியும் வேலும் விலக்கவும்—பொற்புடைய
பாணி நடைப்புரவிப் பல்களிற்றார் சாத்தினார்
ஏணி பலவும் எயில். 18

எயிற்பாசி:—

உடல்சினத்தார் கடியரணம்
மிடல்சாய மேலிவர்ந்தன்று.

வ-று. சுடுமண் நெடுமதில் சுற்றிப் பிரியார்
கடுமுரண் எஃகங் கழிய—அடுமுரண்
ஆறினா ரன்றி அரவும் உடும்பும்போல்
ஏறினார் ஏணி பலர். 19

முதுவுழிஞை:—

வேய்பிணங்கிய மிளைஅரணம்
பாய்புள்ளிற் பரந்திழிந்தன்று.

வ-று. கோடுயர் வெற்பின் நிலங்கண் டிரைகருதுந்
தோடுகொள் புள்ளின் தொகையொப்பக்—கூடார்
முரணகத்துப் பாற முழவுத்தோள் மள்ளர்
அரணகத்துப் பாய்ந்திழிந்தார் ஆர்த்து. 20

இதுவுமது:—

செருமதிலோர் சிறப்புரைத்தலும்
அருமுரணோன் அத்துறையாகும்.

வ-று. அறியார் வயவர் அகத்திழிந்த பின்னும்
நெறியார் நெடுமதிலுள் நேரார்—மறியாங்
கிளியொடு நேராங் கிளவியார் வாட்கட்
களியுறு காமங் கலந்து. 21

அகத்துழிஞை:—

முரணவியச் சினஞ்சிறந்தோர்
அரணகத்தோரை அமர்வென்றன்று.

வ-று. செங்கண் மறவர் சினஞ்சொரிவாள் சென்றியங்க
அங்கண் விசும்பின் அணிதிகழுந்—திங்கள்
முகத்தார் அலற முகிலுரிஞ்சுஞ் சூழி
அகத்தாரை வென்றார் அமர். 22

முற்றுமுதிர்வு:—

அகத்தோன் காலை அதிர்முர சியம்பப்
புறத்தோன் வெஞ்சினப் பொலிவுரைத் தன்று.

வ-று. காலை முரச மதிலியம்பக் கண்கனன்று
வேலை விறல்வெய்யோன் நோக்குதலும்—மாலை
அடுகம் அடிசிலென் றம்மதிலுள் இட்டார்
தொடுகழலார் மூழை துடுப்பு. 23

யானைகைக்கோள்:—

மாறுகொண்டார் மதிலழிய
ஏறுந்தோட்டியும் எறிந்துகொண்டன்று.

வ-று. ஏவல் இகழ்மறவர் வீய இகல்கடந்து
காவலும் யானையும் கைக்கொண்டான்—மாவலான்
வம்புடை ஒள்வாள் மறவர் தொழுதேத்த
அம்புடை ஞாயில் அரண். 24

வேற்றுப் படைவரவு:—

மொய்திகழ் வேலோன் முற்றுவிட் டகலப்
பெய்தார் மார்பிற் பிறன்வர வுரைத்தன்று.

வ-று. உவன்இன் றுறுதுயரம் உய்யாமை நோக்கி
அவனென் றுலகேத்தும் ஆண்மை—இவனன்றி
மற்றியார் செய்வார் மழைதுஞ்சு நீளரணம்
முற்றியார் முற்று விட. 25

உழுதுவித்திடுதல்:—

எண்ணார் பல்எயில் கழுதையேர் உழுவித்து
உண்ணா வரகொடு கொள்வித் தின்று.

வ-று. எழுதெழில் மாடத் திடனெலாம் தூறிக்
கழுதைஏர் கையொளிர்வேல் கோலா—உழுததற்பின்
வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதாற்
கள்விரவு தாரான் கதம். 26

வாண்மண்ணுநிலை:—

புண்ணிய நீரிற் புரையோர் ஏத்த
மண்ணிய வாளின் மறங்கிளந் தன்று.

வ-று. தீர்த்தநீர் பூவொடு பெய்து திசைவிளங்கக்
கூர்த்தவாள் மண்ணிக் கொடித்தோரான்—பேர்த்தும்
இடியார் பணைதுவைப்ப இம்மதிலுள் வேட்டான்
புடையார் அறையப் புகழ். 27

மண்ணுமங்கலம்:—

வணங்காதார் மதிற்குமரியொடு
மணங்கூடிய மலிபுரைத்தன்று.

வ-று. எங்கண் மலர எயிற்குமரி கூடிய
மங்கல நாள்யாம் மகிழ்துங்கக்—கொங்கலர் தார்ச்
செய்சுடர்ப்பூண் மன்னவன் சேவடிக்கீழ் வைகினவே
மொய்சுடர்ப்பூண் மன்னர் முடி. 28

மகட்பாலிகல்:—

மயிர்சாயல் மகள்வேண்டிய
கயிற்கழலோன் நிலையுரைத்தன்று.

வ-று. அந்தழை அல்குலும் ஆடமை மென்தோளும்
பைந்தளிர் மேனியும் பாராட்டித்—தந்தை
புறமதில் வைகும் புலம்பே தருமே
மறமதில் மன்னன் மகள். 29

திறைகொண்டுபெயர்தல்:—

அடுதிறல் அரணத் தரசு வழிமொழியப்
படுதிறை கொண்டு பதிப்பெயர்ந் தன்று.

வ-று. கோடும் வயிரும் இசைப்பக் குழுமிளை
ஓடெரி வேய உடன்றுலாய்ப்—பாடி
உயர்ந்தோங் கரணகத் தொன்னார் பணியப்
பெயர்ந்தான் பெருந்தகையி னன். 30

அடிப்படவிருத்தல்:—

பேணாதார் மறங்கால
ஆணைகொண் டடிப்படவிருந்தன்று.

வ-று. ஒன்றியவர்நா டொருவழித்தாய்க் கூக்கேட்ப
வென்றி விளையா விழுமதிலோர்—என்றும்
பருந்தார் செருமலையப் பாடி பெயராது
இருந்தான் இகன்மறவர் ஏறு. 31

தொகைநிலை:—

எம்மதிலின் இகல்வேந்தரும்
அம்மதிலின் அடியடைந்தன்று.

வ-று. நாவல் பெயரிய ஞாலத் தடியடைந்து
ஏவல் எதிரா திகல்புரிந்த—காவலர்
வில்நின்ற தானை விறல்வெய்யோற் கம்மதிலின்
முன்னின் றவிந்தார் முரண். 32

ஏழாவது

தும்பைப் படலம்

சூத்திரம் 7

துன்னருங் கடும்போர்த் தும்பை தும்பை யரவந்
தன்னிகர் இல்லாத் தானை மறமே
யானை மறத்தொடு குதிரை மறமே
தார்நிலை தேர்மறம் பாணது பாட்டே
இருவருந் தபுநிலை எருமை மறமே
ஏம வெருமை நூழி லென்று
நூழி லாட்டே முன்றேர்க் குரவை
பின்றேர்க் குரவை பேய்க்குர வையே
களிற்றுட னிலையே ஒள்வா ளமலை
தானை நிலையே வெருவரு நிலையே
சிருங்கார நிலையே உவகைக் கலுழ்ச்சி
தன்னை வேட்டல் தொகைநிலை யுளப்பட
நன்பொருள் தெரிந்தோர் நாலிரு மூன்றும்
வண்பூந் தும்பை வகையென மொழிப.

தும்பை:—

செங்களத்து மறங்கருதிப்
பைந்தும்பை தலைமலைந்தன்று.

வ-று. கார்கருதி நின்றதிருங் கௌவை விழுப்பணையான்
சோர்குருதி சூழா நிலனனைப்பப்—போர்கருதித்
துப்புடைத் தும்பை மலைந்தான் துகளறுசீர்
வெப்புடைத் தானைஎம் வேந்து. 1

தும்பையரவம்:—

பொன்புனைந்த கழலடியோன்
தன்படையைத் தலையளித்தன்று.

வ-று. வெல்பொறியும் நாடும் விழுப்பொருளுந் தண்ணடையும்
கொள்களிறும் மாவுங் கொடுத்தளித்தான்—பல்புரவி
நன்மணித் திண்டேர் நயவார் தலைபனிப்பப்
பன்மணிப் பூணான் படைக்கு. 2

தானைமறம்:—

தாம்படைத் தலைக்கொள்ளாமை
ஓம்படுத்த உயர்புகூறின்று.

வ-று. கழுதார் பறந்தலைக் கண்ணுற்றுத் தம்முள்
இழுதார்வேல் தானை இகலிற்—பழுதாம்
செயிர்காவல் பூண்டொழுகுஞ் செங்கோலார் செல்வம்
உயிர்காவ லென்னும் உரை. 3

இதுவுமது:—

பூம்பொழிற் புறங்காவலனை
ஓம்படுத்தற்கும் உரித்தெனமொழிப.

வ-று. வயிர்மேல் வளைஞால வைவேலும் வாளுஞ்
செயிர்மேற் கனல்விழிப்பச் சீறி—உயிர்மேற்

பலகழியு மேனும் பரிமான்தேர் மன்னர்க்கு
உலகழியும் ஓர்த்துச் செயின். 4

இதுவுமது:—

வேற்றானை மறங்கூறி மாற்றார தழிபிரங்கினும்
ஆற்றி னுணரின் அத்துறை யாகும்.

வ-று. மின்னார் சினஞ்சொரிவேல் மீளிக் கடற்றானை
ஒன்னார் நடுங்க உலாய்நிமிரின்—என்னாங்கொல்
ஆழித்தேர் வெல்புரவி அண்ணல் மதயானைப்
பாழித்தோள் மன்னர் படை. 5

யானைமறம்:—

எழும் அரவக் கடற்றானையான்
மழகளிற்றின் மறங்கிளந்தன்று.

வ-று. அடக்கருந் தானை அலங்குதார் மன்னர்
விடக்கும் உயிரும் இசையக்—கடற்படையுட்
பேயும் எருவையுங் கூற்றுந்தன் பின்படரக்
காயுங் கழலான் களிறு. 6

குதிரைமறம்:—

எறிபடையான் இகலமருள்
செறிபடைமான் திறங்கிளந்தன்று.

வ-று. குந்தங் கொடுவிற் குருதிவேல் கூடாதார்
வந்த வகையறியா வாளமருள்—வெந்திறல்
ஆர்கழல் மன்னன் அலங்குளைமா வெஞ்சிலை
வார்கணையின் முந்தி வரும். 7

தார்நிலை:—

முன்னெழுதரு படைதாங்குவனென
மன்னவற்கு மறங்கிளந்தன்று.

வ-று. உறுசுடர் வாளோ டொருகால் விலங்கிற்
சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டாய்-எறிசுடர்வேல்
தேங்குலாம் பூந்தெரியல் தேர்வேந்தே நின்னொடு
பாங்கலா மன்னர் படை.

இதுவுமது:—

ஒருகுடை மன்னனைப் பலகுடை நெருங்கச்
செருவிடைத் தமியன் தாங்கற்கு முரித்தே.

வ-று. காலால் மயங்கிக் கதிர்மறைத்த கார்முகில்போல்
வேலான்கை வேல்பட வீழ்ந்தனவே—தோலா
இலைபுனை தண்டார் இறைவன்மேல் வந்த
மலைபுரை யானை மறிந்து. 9

தேர்மறம்:—

முறிமலர்த்தார் வயவேந்தன்
செறிமணித்தேர்ச் சிறப்புரைத்தன்று.

வ-று. செருமலி வெங்களத்துச் செங்குருதி வெள்ளம்
அருமுரா ணாழி தொடர—வருமரோ
கட்டார் கமழ்தெரியற் காவலன் காமர்தேர்
ஒட்டார் புறத்தின்மே லூர்ந்து. 10

பாண்பாட்டு:—

வெண்கோட்ட களிறெறிந்து செங்களத்து வீழ்ந்தார்க்குக்
கைவல்யாழ்ப் பாணர் கடனிறுத் தன்று.

வ-று. தளரியல் தாய்புதல்வர் தாமுணா ராமைக்
களரிக் கனல்முழங்க மூட்டி—விளரிப்பண்
கண்ணினர் பாணர் களிறெறிந்து வீழ்ந்தார்க்கு
விண்ணினர் செய்தார் விருந்து. 11

இருவருந்தபுநிலை:—

பொருபடை களத்தவிய
இருவேந்தரும் இகலவிந்தன்று.

வ-று. காய்ந்து கடுங்களிறு கண்கனலக் கைகூடி
வேந்தர் இருவரும் விண்படர—ஏந்து
பொருபடை மின்னப் புறங்கொடா பொங்கி
இருபடையு நீங்கா இகல். 12

எருமைமறம்:—

வெயர்பொடிப்பச் சினங்கடைஇப்
பெயர்படைக்குப் பின்னின்றன்று.

வ-று. கடுங்கண் மறவன் கனல்விழியாச் சீறி
நெடுங்கைப் பிணத்திடை நின்றான்—நடுங்கமருள்
ஆள்வெள்ளம் போகவும் போகான்கை வேலூன்றி
வாள்வெள்ளந் தன்மேல் வர. 13

ஏமவேருமை:—

குடைமயங்கிய வாளமருட்
படைமயங்கப் பாழிகொண்டன்று.

வ-று. மருப்புத்தோ ளாக மதர்விடையிற் சீறிச்
செருப்புகன்று செங்கண் மறவன்-நெருப்பிமையாக்
கைக்கொண்ட எஃகங் கடுங்களிற்றின் மேற்போக்கி
மெய்க்கொண்டான் பின்னரு மீட்டு. 14

நூழில்:—

கழல்வேந்தர் படைவிலங்கி
அழல்வேல்திரித் தாட்டமர்ந்தன்று.

வ-று. ஆட லமர்ந்தான் அமர்வெய்யோன் வீழ்குடர்
சூடல் மலிந்த சுழல்கட்பேய்—மீடன்

மறந்தவேல் ஞாட்பின் மலைந்தவர் மார்பந்
திறந்தவேல் கையில் திரித்து. 15

நூழிலாட்டு:—

களங்கழுமிய படையிரிய
உளங்கழிந்தவேல் பறித்தோச்சின்று.

வ-று. மொய்யகத்து மன்னர் முரணினி என்னுங்கொல்
கையகத்துக் கொண்டான் கழல்விடலை—வெய்ய
விடுசுடர் சிந்தி விரையகலம் போழ்ந்த
படுசுடர் எஃகம் பறித்து. 16

முன்றேர்க்குரவை:—

எழுவுறழ் திணிதோள் வேந்தன் வெல்தேர்
முழுவலி வயவர் முன்னா டின்று.

வ-று. ஆனா வயவர்முன் ஆட அமர்க்களத்து
வானார்மின் னாகி வழிநுடங்கும்—நோனாக்
கழுமணிப் பைம்பூண் கழல்வேந்தன் ஊரும்
குழுமணித் திண்தேர்க் கொடி. 17

பின்றேர்க்குரவை:—

கருங்கழன் மறவரொடு வெள்வளை விறலியர்
பெருந்தகை தேரின் பின்னா டின்று.

வ-று. கிளையாய்ந்து பண்ணிய கேள்வியாழ்ப் பாணும்
வளையா வயவரும் பின்னாக்—கொளையாய்ந்து
அசைவிளங்கும் பாடலொ டாட வருமே
திசைவிளங்குந் தானையான் தேர். 18

பேய்க்குரவை:—

மன்னன் ஊரு மறமிகு மணித்தேர்ப்
பின்னு முன்னும் பேயா டின்று.

வ-று. முன்னரும் பின்னரும் மூரிக் கடற்றானை
மன்னன் நெடுந்தேர் மறனேத்தி—ஒன்னார்
நிணங்கொள்பேழ் வாய நிழல்போல் நுடங்கிக்
கணங்கொள்பே யாடும் களித்து. 19

களிற்றுடனிலை:—

ஒளிற்றெஃகம் படவீழ்ந்த
களிற்றின்கீழ்க் கண்படுத்தன்று.

வ-று. இறுவரை வீழ இயக்கற் றவிந்த
தறுகட் டகையரிமாப் போன்றான்—சிறுகட்
பெருங்கைக் களிறெறிந்து பின்னதன்கீழ்ப் பட்ட
கருங்கழற் செவ்வே லவன். 20

ஒள்வாளமலை:--

வலிகெழுதோள் வாள்வயவர்
ஒலிகழலான் உடனாடின்று.

வ-று. வாளை பிறழுங் கயங்கடுப்ப வந்தடையார்
ஆளமர் வென்றி அடுகளத்துத்—தோள்பெயராக்
காய்ந்தடு துப்பிற் கழன்மறவர் ஆடினார்
வேந்தொடு வெள்வாள் விதிர்த்து. 21

தானைநிலை:—

இருபடையு மறம்பழிச்சப்
பொருகளத்துப் பொலிவெய்தின்று.

வ-று. நேரார் படையின் நிலைமை நெடுந்தகை
ஓரான் உறைகழியான் ஒள்வாளுந்—தோரார்க்கும்
வெம்பரிமா ஊர்ந்தார்க்கும் வெல்களிற்றின் மேலார்க்கும்
கம்பமா நின்றான் களத்து. 22

வெருவருநிலை:—

விலங்கமருள் வியலகலம் வில்லுதைத்த கணைகிழிப்ப
நிலந்தீண்டா வகைப்பொலிந்த நெடுந்தகைநிலை யுரைத்தன்று.

வ-று. வெங்கண் முரசதிரும் வேலமருள் வில்லுதைப்ப
எங்கு மருமத் திடைகுளிப்பச்—செங்கட்
புலவாள் நெடுந்தகை பூம்பொழில் ஆகங்
கலவாமற் காத்த கணை. 23

சிருங்காரநிலை:—

பகைபுகழக் கிடந்தானை
முகைமுறுவலார் முயக்கமர்ந்தன்று.

வ-று. எங்கணவன் எங்கணவன் என்பார் இகல்வாடத்
தங்கணவன் தார்தம் முலைமுகப்ப—வெங்கணைசேர்
புண்ணுடை மார்பம் பொருகளத்துப் புல்லினார்
நுண்ணிடைப் பேரல்கு லார். 24

உவகைக்கலுழ்ச்சி:—

வாள்வாய்த்த வடுவாழ்யாக்கைக்
கேள்கண்டு கலுழ்ந்துவந்தன்று.

வ-று. வெந்தொழிற் கூற்றமு நாணின்று வெங்களத்து
வந்த மறவர்கை வாள்துமிப்பப்—பைந்தொடி
ஆடரிமா அன்னான் கிடப்ப அகத்துவகை
ஓடரிக்கண் நீர்பாய் உக. 25

தன்னைவேட்டல்:—

தம்மிறைவன் விசும்படைந்தென
வெம்முரணோன் உயிர்வேட்டன்று.

வ-று. வானம் இறைவன் படர்ந்தென வாள்துடைப்பா
மானமே நெய்யா மறம்விறகாத்—தேன்இமிரும்

கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாளமர்
ஒள்ளழலுள் வேட்டான் உயிர். 26

இதுவுமது:—

காய்கதிர் நெடுவேற் கணவனைக் காணிய
ஆயிழை சேறலும் அத்துறை யாகும்.

வ-று. கற்பின் விழுமிய இல்லைக் கடையிறந்து
இற்பிறப்பு நாணும் இடைஒழிய—நற்போர்
அணங்கிய வெங்களத்து ஆருயிரைக் காண்பான்
வணங்கிடை தானே வரும். 27

தொகைநிலை:—

அழிவின்று புகழ்நிறீஇ
ஒழிவின்று களத்தொழிந்தன்று.

வ-று. மண்டமர்த் திண்தோள் மறங்கடைஇ மண்புலம்பக்
கண்டிரள்வேல் மன்னர் களப்பட்டார்—பெண்டிர்
கடிதெழு செந்தீக் கழுமினர் இன்னுங்
கொடிதேகாண் ஆர்ந்தின்று கூற்று. 28

எட்டாவது
வாகைப் படலம்

சூத்திரம் 8

சீர்சால் வாகை வாகை யரவம்
அரச வாகை முரச வாகை
மறக்கள வழியொடு களவேள் வியே
முன்றேர்க் குரவை பின்றேர்க் குரவை
பார்ப்பன வாகை வாணிக வாகை

வேளாண் வாகை பொருந வாகை
அறிவன் வாகை தாபத வாகை
கூதிர்ப் பாசறை வாடைப் பாசறை
அரச முல்லை பார்ப்பன முல்லை
அவைய முல்லை கணிவன் முல்லை
மூதின் முல்லை ஏறாண் முல்லை
வல்லாண் முல்லை காவன் முல்லை
பேராண் முல்லை மறமுல் லையே
குடைமுல் லையொடு கண்படை நிலையே
அவிப்பலி யென்றா சால்பு முல்லை
கிணைநிலை ஏனைப் பொருளொடு புகறல்
அருளொடு நீங்கல் உளப்படத் தொகைஇ
மூன்று தலையிட்ட மூவி ரைந்தும்
வான்றோய் வாகைத் திணையது வகையே.

வாகை:—

இலைபுனை வாகை சூடி இகல்மலைந்து
அலைகடல்தானை அரசட் டார்த்தன்று.

வ-று. சூடினன் வாகைச் சுடர்த்தெரியல் சூடுதலும்
பாடினர் வெல்புகழைப் பல்புலவர்—கூடார்
உடல்வேல் அழுவத்து ஒளிதிகழும் பைம்பூண்
அடல்வேந்தன் அட்டார்த் தரசு. 1

வாகையரவம்:—

வெண்கண்ணியும் கருங்கழலுஞ்
செங்கச்சுந் தகைபுனைந்தன்று.

வ-று. அனைய அமருள் அயில்போழ் விழுப்புண்
இனைய இனிக்கவலை யில்லை—புனைக

அழலோடு இ[illegible]மைக்கும் அணங்குடைவாள் மைந்த[illegible]
கழலோடு பூங்கண்ணி க[illegible] 2

600 008

அரச[illegible]கை:—

பகலன்ன வாய்மொழி
இகல்வேந்தன் இயல்புரைத்தன்று.

வ-று. காவல் அமைந்தான் கடலுலகங் காவலால்
ஓவல் அறியாது உயிர்க்குவகை—மேவருஞ்சீர்
ஐந்தொழில் நான்மறை முத்தீ இருபிறப்பு
வெந்திறல் தண்ணளிஎம் வேந்து. 3

முரசவாகை:—

ஒலிகழலான் அகனகருட்
பலிபெறுமுரசின் பண்புரைத்தன்று.

வ-று. மதியேர் நெடுங்குடை மன்னர் பணிந்து
புதிய புகழ்மாலை வேய—நிதியம்
வழங்குந் தடக்கையான் வான்தோய் நகருள்
முழங்கும் அதிரு முரசு. 4

மறக்களவழி:—

முழவுறழ் திணிதோளானை
உழவனாக உரைமலிந்தன்று.

59392

வ-று. அஞ்சவரு தானை அமரென்னு நீள்வயலுள்
வெஞ்சினம் வித்திப் புகழ்விளைக்குஞ்—செஞ்சுடர்வேற்
பைங்கட் பணைத்தாட் பகட்டுழவன் நல்கலான்
எங்கட் கடையா இடர். 5

831, E

களவேள்வி:—

அடுதிறல் அணங்கார
விடுதிறலான் களம்வேட்டன்று.

வ-று. பிடித்தாடி அன்ன பிறழ்பற்பேய் ஆரக்
கொடித்தானை மன்னன் கொடுத்தான்-முடித்தலைத்
தோளொடு வீழ்ந்த தொடிக்கை துடுப்பாக
மூளையஞ் சோற்றை முகந்து. 6

முன்றேர்க்குரவை:—

வென்றேந்திய விறற்படையோன்
முன்றேர்க்கண் அணங்காடின்று.

வ-று. உலவா வளஞ்செய்தான் ஊழிவாழ் கென்று
புலவாய புன்தலைப்பே யாடும்—கலவா
அரசதிர நூறி அடுகளம் வேட்டான்
முரசதிர வென்றதேர் முன். 7

பின்றேர்க்குரவை:—

பெய்கழலான் தேரின்பின்
மொய்வளைவிறலியர் வயவரொடாடின்று.

வ-று. வஞ்சமில் கோலானை வாழ்த்தி வயவரும்
அஞ்சொல் விறலியரும் ஆடபவே—வெஞ்சமரில்
குன்றேர் மழகளிறுங் கூந்தற் பிடியும்போற்
பின்றேர்க் குரவை பிணைந்து. 8

பார்ப்பனவாகை:—

கேள்வியாற் சிறப்பெய்தியானை
வேள்வியான் விறன்மிகுத்தன்று.

வ-று. ஓதங் கரைதவழ்நீர் வேலி உலகினுள்
வேதங் கரைகண்டான் வீற்றிருக்கும்—ஏதம்
சுடுசுடர் தானாகிச் சொல்லவே வீழ்ந்த
விடுசுடர் வேள்வி அகத்து. 9

வாணிகவாகை:—

செறுதொழிலிற் சேணீங்கியான்
அறுதொழிலும் எடுத்துரைத்தன்று.

வ-று. உழுது பயன்கொண்டு ஒலிநிரை ஓம்பிப்
பழுதிலாப் பண்டம் பகர்ந்து—முழுதுணர
ஓதி அழல்வழிபட்டு ஓம்பாத ஈகையான்
ஆதி வணிகர்க் கரசு. 10

வேளாண்வாகை:—

மேல்மூவரும் மனம்புகல
வாய்மையான் வழிபொழுகின்று.

வ-று. மூவரும் நெஞ்சமர முற்றி அவரவர்
ஏவல் எதிர்கொண்டு மீண்டுரையான்—ஏவல்
வழுவான் வழிநின்று வண்டார் வயலுள்
உழுவான் உலகுக்கு உயிர். 11

பொருநவாகை:—

புகழொடு பெருமை நோக்கி யாரையும்
இகழ்தல் ஓம்பென எடுத்துரைத் தன்று.

வ-று. வெள்ளம்போல் தானை வியந்து விரவாரை
எள்ளி உணர்தல் இயல்பன்று--தெள்ளியார்
ஆறுமேல் ஆறியபின் அன்றித்தங் கைக்கொள்ளார்
நீறுமேல் பூத்த நெருப்பு. 12

அறிவன்வாகை:—

புகழ்நுவல முக்காலமும்
நிகழ்பறிபவன் இயல்புரைத்தன்று.

வ-று. இம்மூ உலகின் இருள்கடியும் ஆய்கதிர்போல்
அம்மூன்றும் முற்ற அறிதலால்—தம்மின்
உறழா மயங்கி உறழினும் என்றும்
பிறழா பெரியோர்வாய்ச் சொல். 13

தாபதவாகை:—

தாபத முனிவர் தவத்தொடு முயங்கி
ஓவுதல் அறியா ஒழுக்குரைத் தன்று.

வ-று. நீர்பலகால் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடைஇச்
சோர்சடை தாழச் சுடரோம்பி—ஊரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி. 14

கூதிர்ப்பாசறை:—

கூற்றனையான் வியன்கட்டூர்க் கூதிர்வான் துளிவழங்க
ஆற்றாமை நனிபெருகவும் அயில்வேலோன் அளிதுறந்தன்று.

வ-று. கவலை மறுகிற் கடுங்கண் மறவர்
உவலைசெய் கூரை ஒடுங்கத்—துவலைசெய்
கூதிர் நலியவும் உள்ளான் கொடித்தேரான்
மூதில் மடவாள் முயக்கு. 15

வாடைப்பாசறை:—

வெந்திறலான் வியன்பாசறை வேல்வயவர் விதிர்ப்பெய்த
வந்துலாய்த் துயர்செய்யும் வாடையது மலிபுரைத்தன்று.

வ-று. வாடை நலிய வடிக்கணாள் தோள்நசைஇ
ஓடை மழகளிற்றான் உள்ளான்கொல்—கோடன்
முகையோ டலமர முற்றெரிபோல் பொங்கிப்
பகையொடு பாசறை யுளான். 16

அரசமுல்லை:—

செருமுனை யுடற்றும் செஞ்சுடர் நெடுவேல்
இருநிலங் காவலன் இயல்புரைத் தன்று.

வ-று. செயிர்க்கண் இகழாது செங்கோ லுயரி
மயிர்க்கண் முரசம் முழங்க—உயிர்க்கெல்லாம்
நாவல் அகலிடத்து ஞாயிறு அனையனுக்
காவலன் சேறல் கடன். 17

பார்ப்பனமுல்லை:—

கான்மலியு நறுந்தெரியற் கழல்வேந்தர் இகலவிக்கு
நான்மறையோன் நலம்பெருகு நடுவுநிலை யுரைத்தன்று.

வ-று. ஒல்லெனீர் ஞாலத் துணர்வோ விழுமிதே
நல்லிசை முச்செந்தீ நான்மறையோன்—செல்லலும்
வென்றன்றி மீளா விறல்வேந்தர் வெம்பகை
என்றன்றி மீண்ட திலர். 18

அவையமுல்லை:—

நவைநீங்க நடுவுகூறும்
அவைமாந்தர் இயல்புரைத்தன்று.

வ-று. தொடைவிடை ஊழாத் தொடைவிடை துன்னித்
தொடைவிடை ஊழிவை தோலாத்-தொடைவேட்டு
அழிபடல் ஆற்றல் அறிமுறையேன்று எட்டின்
வழிபடர்தல் வல்ல தவை. 19

கணிவன்முல்லை:—

துணிபுணருந் தொல்கேள்விக்
கணிவனது புகழ்கிளந்தன்று.

வ-று. புரிவின்றி யாக்கைபோற் போற்றுவ போற்றிப்
பரிவின்றிப் பட்டாங் கறியத்—திரிவின்றி
விண்ணிவ் வுலகம் விளைக்கும் விளைவெல்லாங்
கண்ணி யுரைப்பான் கணி. 20

மூதின்முல்லை:—

அடல்வேல் ஆடவர்க்கு அன்றியும் அவ்வில்
மடவரல் மகளிர்க்கு மறமிகுத் தன்று.

வ-று. வந்த படைநோனாள் வாயின் முலைபறித்து
வெந்திறல் எஃகம் இறைக்கொளீஇ—முந்தை
முதல்வர்கல் தான்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு. 21

ஏறாண்முல்லை:—

மாறின்றி மறங்கனலும்
ஏறாண்குடி எடுத்துரைத்தன்று.

வ-று. கல்நின்றான் எந்தை கணவன் களப்பட்டான்
முன்நின்று மொய்யவிந்தார் என்னையர்-பின்நின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
எய்போற் கிடந்தான்என் ஏறு. 22

வல்லாண்முல்லை:—

இல்லும் பதியும் இயல்புங் கூறி
நல்லாண் மையை நலமிகுத் தன்று.

வ-று. வில்முன் கணைதெரியும் வேட்டைச் சிறுசிறூர்
முன்முன் முயலுகளும் முன்றிற்றே—மன்முன்
வரைமார்பில் வேல்மூழ்க வாளமுவந் தாங்கி
உரைமாலை சூடினன் ஊர். 23

காவன்முல்லை:—

தவழ்திரை முழங்குந் தண்கடல் வேலிக்
கமழ்தார் மன்னவன் காவல் மிகுத்தன்று.

வ-று. பெரும்பூட் சிறுதகைப் பெய்ம்மலர்ப் பைந்தார்க்
கருங்கழல் வெண்குடையான் காவல்—விரும்பான்
ஒருநாள் மடியின் உலகின்மேல் நில்லாது
இருநால் வகையார் இயல்பு. 24

இதுவுமது:—

தக்காங்குப் பிறர்கூறினும்
அத்துறைக் குரித்தாகும்.

வ-று. ஊறின்று உவகையுள் வைக உயிரோம்பி
ஆறிலொன்று ஆனது அளித்துண்டு—மாறின்றி
வான்காவல் கொண்டான் வழிநின்று வைகலுந்
தான்காவல் கோடல் தகும். 25

பேராண்முல்லை:—

உளம்புகல மறவேந்தன்
களங்கொண்ட சிறப்புரைத்தன்று.

வ-று. ஏந்துவாள் தானை இரிய உறைகழித்துப்
போந்துவாள் மின்னும் பொருசமத்து—வேந்தர்
இருங்களி யானை இனமிரிந் தோடக்
கருங்கழலான் கொண்டான் களம். 26

மறமுல்லை:—

வெள்வாள் வேந்தன் வேண்டிய தீயவும்
கொள்ளா மறவன் கொதிப்புரைத் தன்று.

வ-று. வின்னவில் தேர்ளானும் வேண்டிய கொள்கென்னும்
கன்னவில் திண்டோட் கழலானும்—மன்னன்முன்
ஒன்றான் அழல்விழியா ஒள்வாள் வலனேந்தி
நின்றான் நெடிய மொழிந்து. 27

குடைமுல்லை:—

மொய்தாங்கிய முழுவலித்தோட்
கொய்தாரான் குடைபுகழ்ந்தன்று.

வ-று. வேயுள் விசும்பு விளங்கு கதிர்வட்டந்
தாய புகழான் தனிக்குடைக்குத்—தோயம்
எதிர்வழங்கு கொண்மூ இடைபோழ்ந்த சுற்றுக்
கதிர்வழங்கு மாமலை காம்பு. 28

கண்படைநிலை:—

மண்கொண்ட மறவேந்தன்
கண்படைநிலை மலிந்தன்று.

வ-று. கொங்கலர்தார் மன்னருங் கூட்டளப்பக் கூற்றணங்கும்
வெங்கதிர்வேல் தண்டெரியல் வேந்தற்குப்—பொங்கும்
புனலாடை யாளும் புனைகுடைக்கீழ் வைகக்
கனலா துயிலேற்ற கண். 29

அவிப்பலி:—

வெள்வாள் அமருட் செஞ்சோ றல்லது
உள்ளா மைந்தர் உயிர்ப்பலி கொடுத்தன்று.

வ-று. சிறந்த திதுவென்னச் செஞ்சோறு வாய்ப்ப
மறந்தரு வாளமர் என்னும்— பிறங்கழலுள்
ஆருயிர் என்னும் அவிவேட்டார் ஆங்கஃதால்
வீரியரெய் தற்பால வீடு. 30

சால்புமுல்லை:—

வான்தோயும் மலையன்ன
சான்றோர்தஞ் சால்புரைத்தன்று.

வ-று. உறையார் விசும்பின் உவாமதி போல
நிறையா நிலவுத லன்றிக்—குறையாத
வங்கம்போழ் முந்நீர் வளம்பெறினும் வேறாமோ
சங்கம்போல் வாய்மையார் சால்பு. 31

கிணைநிலை:—

தண்பணை வயலுழவனைத்
தெண்கிணைவன் திருந்துபுகழ்கிளந்தன்று.

வ-று. பகடுவாழ் கென்று பனிவயலுள் ஆமை
அகடுபோல் அங்கட் டடாரித்—துகள்துடைத்துக்
குன்றுபோற் போர்விற் குருசில் வளம்பாட
இன்றுபோம் எங்கட் கிடர். 32

பொருளொடுபுகறல்:—

வையகத்து விழைவறுத்து
மெய்யாய பொருள்நயந்தன்று.

வ-று. ஆமினி மூப்பும் அகன்றது இளமையும்
தாமினி நோயுந் தலைவரும்—யாமினி
மெய்யைந்து மீதூர வைகாது மேல்வந்த
ஐயைந்தும் ஆய்வ தறிவு. 33

அருளொடுநீங்கல்:—
ஒலிகடல்வையகத்து
நலிவுகண்டு நயப்பவிந்தன்று.

வ-று. கயக்கிய நோயவர்க் கையிகந்து நம்மை
இயக்கிய யாக்கை இருமுன்—மயக்கிய
பட்படா வைகும் பயன்ஞால நீள்வலை
உட்படாம் போத லுறும். 34

ஒன்பதாவது

பாடாண் படலம்

சூத்திரம் 9

பாடாண் பாட்டே வாயி னிலையே
கடவுள் வாழ்த்தொடு பூவை நிலையே
பரிசிற் றுறையே இயன்மொழி வாழ்த்தே
கண்படை நிலையே துயிலெடை நிலையே
மங்கல நிலையொடு விளக்கு நிலையே
கபிலை கண்ணிய புண்ணிய நிலையே
வேள்வி நிலையொடு வெள்ளி நிலையே
நாடு வாழ்த்தொடு கிணையது நிலையே
களவழி வாழ்த்தே
வீற்றினி திருந்த பெருமங் கலமே
குடுமி களைந்த புகழ்சாற்று நிலையே
மணமங் கலமே பொலிவுமங் கலமே
நாண்மங் கலமே பரிசி னிலையே
பரிசில் விடையே ஆள்வினை வேள்வி

பாணாற்றுப் படையே கூத்தராற்றுப் படையே
பொருநாற்றுப் படையொடு விறலியாற்றுப் படையே
வாயுறை வாழ்த்தே செவியறி வுறூஉக்
குடைமங் கலமொடு வாண்மங் கலமே
மண்ணு மங்கலமே ஓம்படை எனப்
புறநிலை வாழ்த்தும் உளப்படத் தொகைஇ
அமரர்கண் முடியும் அறுவகை யாகிய
கொடிநிலை கந்தழி வள்ளி குணஞ்சால்
புலவரை அவர்வயிற் புகழ்ந்தாற்றுப் படுத்தல்
புகழ்ந்தனர் பரவல் பழிச்சினர்ப் பணிதல்
நிகழ்ந்த காமப் பகுதியுட் டோன்றிய
கைக்கிளை வகையும் பெருந்திணை வகையும்
நற்றுனி நவின்ற பாடாண் பாட்டும்
கடவுட் பக்கத்தும் ஏனோர் பக்கத்தும்
மடவரல் மகளிர் மகிழ்ந்த பக்கமும்
மாதர் மகிழ்ந்த குழவியும் ஊரின்
கண்ணே தோன்றிய காமப் பகுதியொடு
ஆங்க ஆறெண் பகுதிப் பொருளும்
பாங்குற உரைப்பது பாடாண் பாட்டே.

பாடாண்பாட்டு:—

ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்
அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று.

வ-று. மன்னர் மடங்கன் மறையவர் சொன்மாலை
அன்ன நடையினார்க் காரமுதம்—துன்னும்
பரிசிலர்க்கு வானம் பனிமலர்ப் பைந்தார்
எரிசினவேற் றானைஎங் கோ. 1

வாயினிலை:—

புரவலன் நெடுங்கடை குறுகிய வென்னிலை
கரவின் றுரையெனக் காவலற் குரைத்தன்று.

வ-று. நாட்டிய வாய்மொழி நாப்புலவர் நல்லிசை
ஈட்டிய சொல்லான் இவனென்று—காட்டிய
காயலோங்கு எஃகிமைக்கும் கண்ணார் கொடிமதில்
வாயிலோய் வாயில் இசை. 2

கடவுள் வாழ்த்து:—

காவல் கண்ணிய கழலோன் கைதொழு
மூவரில் ஒருவனை எடுத்துரைத் தன்று.

வ-று. வைய மகளை அடிப்படுத்தாய் வையகத்தார்
உய்ய வுருவம் வெளிப்படுத்தாய்—வெய்ய
அடுந்திறல் ஆழி அரவணையாய் என்று
நெடுந்தகை நின்னையே யாம். 3

பூவைநிலை:—

கறவை காவல னிறனொடு பொரீஇப்
புறவலர் பூவைப் பூப்புகழ்ந் தன்று.

வ-று. பூவை விரியும் புதுமலரிற் பூங்கழலோய்
யாவை விழுமிய யாமுணரேம்—மேவார்
மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை
நிறத்தொடு நேர்தருத லான். 4

பரிசிற்றுறை:—

மண்ணகங் காவன் மன்னன் முன்னர்
எண்ணிய பரிசில் இதுவென உரைத்தன்று.

வ-று. வரிசை கருதாது வான்போல் தடக்கைக்
குரிசினீ நல்கயாங் கொள்ளும்—பரிசில்
அடுகள மார்ப அமர்ஓட்டித் தந்த
படுகளி நால்வாய்ப் பகடு. 5

இயன்மொழிவாழ்த்து:—

இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும்
அன்னோர் போல அவையெமக் கீகென
என்னோரு மறிய எடுத்துரைத் தன்று.

வ-று. முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
இரவாமல் ஈந்த இறைவர்போல் நீயுங்
கரவாமல் ஈகை கடன். 6

இதுவுமது:—

மயலறு சீர்த்தி மான்தேர் மன்னவன்
இயல்பே மொழியினும் அத்துறை யாகும்.

வ-று. ஒள்வாள் அமருள் உயிர்ஓம்பான் தான்ஈயக்
கொள்வார் நடுவட் கொடையோம்பான்—வெள்வாள்
கழியாமே மன்னர் கதங்காற்றும் வேலான்
ஒழியாமே ஓம்பு முலகு. 7

கண்படைநிலை:—

நெடுந்தேர்த் தானை நீறுபட நடக்குங்
கடுந்தேர் மன்னவன் கண்படை மலிந்தன்று.

வ-று. மேலார் இறைஅமருள் மின்னார் சினஞ்சொரியும்
வேலான் விறல்முனை வென்றடக்கிக்—கோலால்

கொடிய உலகிற் குறுகாமை எங்கோன்
கடியத் துயிலேற்ற கண். 8

துயிலெடைநிலை:—

அடுதிறல் மன்னரை அருளிய எழுகெனத்
தொடுகழல் மன்னனைத் துயிலெடுப் பின்று.

வ-று. அளந்த திறையார் அகலிடத்து மன்னர்
வளந்தரும் வேலோய் வணங்கக்—களந்தயங்கப்
பூமலர்மேற் புள்ஒலிக்கும் பொய்கைசூழ் தாமரைத்
தூமலர்க்கண் ஏற்க துயில். 9

மங்கலநிலை:—

கங்குல் கனைதுயில் எழுந்தோன் முன்னர்
மங்கலங் கூறிய மலிவுரைத் தன்று.

வ-று. விண்வேண்டின் வேறுதன் மங்கலம் வேந்தர்க்கு
மண்வேண்டில் கைகூப்பன் மங்கலம்—பெண்வேண்டில்
துன்னன் மடவார்க்கு மங்கலந் தோளாப்போர்
மன்னன் வரைபுரையு மார்பு. 10

இதுவுமது:—

மன்னிய சிறப்பின் மங்கல மரபில்
துன்னினன் என்றலும் அத்துறையாகும்.

வ-று. தீண்டியுங் கண்டும் பயிற்றியுந் தன்செவியால்
வேண்டியுங் கங்குல் விடியலும்—ஈண்டிய
மங்கல மாய நுகர்ந்தான் மறமன்னர்
வெங்களத்து வேலுயர்த்த வேந்து.

விளக்குநிலை:—

அளப்பருங் கடற்றானையான்
விளக்குநிலை விரித்துரைத்தன்று.

வ-று. வளிதுரந்த கண்ணும் வலந்திரியாப் பொங்கி
ஒளிசிறந் தோங்கி வரலால்—அளிசிறந்து
நன்னெறியே காட்டு நலந்தெரி கோலற்கு
வென்னெறியே காட்டும் விளக்கு. 12

இதுவுமது:—

அடரவிர் பைம்பூண் வேந்தன் தன்னைச்
சுடரொடு பொருவினும் அத்துறை யாகும்.

வ-று. வெய்யோன் கதிர்விரிய விண்மேல் ஒளிஎல்லாம்
மையாந் தொடுங்கி மறைந்தாங்கு—வையகத்துக்
கூத்தவை ஏத்துங் கொடித்தோரான் கூடியபின்
வேத்தவையுள் மையாக்கும் வேந்து. 13

கபிலைகண்ணியபுண்ணியநிலை:—

அண்ண லொன்மறை அந்தணா ளர்க்குக்
கண்ணிய கபிலை நிலையுரைத் தன்று.

வ-று. பருக்காழுஞ் செம்பொன்னும் பார்ப்பார் முகப்பக்
குருக்கட் கபிலை கொடுத்தான்—செருக்கோடு
இடிமுரசத் தானை இகலவிரிய எங்கோன்
கடிமுரசங் காலை செய. 14

வேள்விநிலை:—

அந்தமில் புகழான் அமரரு மகிழச்
செந்தீ வேட்ட சிறப்புரைத் தன்று.

வ-று. கேள்வி மறையோர் கிளைமகிழ்தல் என்வியப்பாம்
வேள்வி விறல்வேந்தன் தான்வேட்ப—நீள்விசும்பின்
ஈர்ந்தார் இமையோரும் எய்தி அழல்வாயால்
ஆர்ந்தார் முறையால் அவி. 15

வெள்ளிநிலை:—

துயர்தீரப் புயல்தருமென
உயர்வெள்ளி நிலையுரைத்தன்று.

வ-று. சூழ்கதிர் வான்விளக்கும் வெள்ளி சுடர்விரியத்
தாழ்புயல் வெள்ளந் தருமரோ—சூழ்புரவித்
தேர்விற்றூர் தாங்கித் திகழ்ந்திலங்கு வேலோய்நின்
மார்விற்றூர் கோவி மழை. 16

நாவோழ்த்து:—

தாட்டாழ் தடக்கையான்
நாட்டது வளமுரைத்தன்று.

வ-று. எண்ணின் இடர்எட்டும் ஒழித்துப் பழனநெற்
கண்ணின் மலரக் கருநீலம்—விண்ணின்
வகைத்தாய் வளனொடு வைகின்று வெல்வேல்
நகைத்தாரான் தான்விரும்பு நாடு. . . 17

கிணைநிலை:—

திருக்கிளரு மகன்கோயில்
அரிக்கிணைவன் வளமுரைத்தன்று.

வ-று. வெள்ளி முளைத்த விடியல் வயல்யாமை
அள்ளகட் டன்ன அரிக்கிணை—வள்ளியோன்
முன்கடை தட்டிப் பகடுவாழ் கென்னுமுன்
என்கடை நீங்கிற் றிடர். 18

களவழி வாழ்த்து:—

செங்களத்துச் செழுஞ்செல்வம்
வெண்துறையாழ்ப் பாணர்விளம்பின்று.

வ-று. ஈண்டி யெருவை இறகுளரும் வெங்களத்து
வேண்டியாங் கொண்ட விறல்வேழம்—வேண்டாள்
வளைகள் வயிரியம்பும் வாட்டானை வேந்தே
விளைகண் பகர்வாள் விலை. 19

வீற்றினிதிருந்த பெருமங்கலம்:—

கூற்றிருந்த கொலைவேலான்
வீற்றிருந்த விறன்மிகுத்தன்று.

வ-று. அழல்அவிர் பைங்கண் அரிமான் அமளி
நிழல்அவிர் பூண்மன்னர் நின்றேத்தக்-கழல்புனைந்து
வீமலிதார் மன்னனுய் வீற்றிருந்தான் வீங்கொலிசீர்ப்
பூமலி நாவற் பொழிற்கு. 20

குடுமிகளைந்தபுகழ் சாற்றுநிலை:—

நெடுமதில் எறிந்து நிரைதார் மன்னன்
குடுமி களைந்த மலிவுரைத் தன்று.

வ-று. பூந்தா மரையிற் பொடித்துப் புகல்விசும்பின்
வேந்தனை வென்றான் விறன்முருகன்—ஏந்து
நெடுமதில் கொண்டு நிலமிசையோர் ஏத்தக்
குடுமி களைந்தான்எங் கோ. 21

மணமங்கலம்:—

இகலடுதோ ளெறிவேல் மன்னன்
மகளிரொடு மணந்த மங்கலங் கூறின்று.

வ-று. அணக்கருந் தானையான் அல்லியந்தார் தோய்ந்தோள்
மணக்கோல மங்கலம் யாம்பாட—வணக்கருஞ்சீர்
ஆரெயின் மன்னன் மடமகள் அம்பணைத்தோள்
கூரெயிற்றுச் செவ்வாய்க் கொடி. 22

போலிவுமங்கலம்:—

வேல்வேந்தன் உள்மகிழப்
பாலகன் பிறப்பப் பலர்புகழ்ந் தன்று.

வ-று. கருங்கழல் வெண்குடைக் காவலற்குச் செவ்வாய்ப்
பெருங்கட் புதல்வன் பிறப்பப்—பெரும்பெயர்
விண்ணோர் மலிந்தார் வியலிடத்தார் ஏத்தினர்
எண்ணார் அவிந்தார் இகல். 23

நாண்மங்கலம்:—

அறந்தரு செங்கோல் அருள்வெய்யோன்
பிறந்தநாட் சிறப்புரைத் தன்று.

வ-று. கரும்பகடுஞ் செம்பொன்னும் வெள்ளணிநாட் பெற்றார்
விரும்பி மகிழ்தல் வியப்போ—சுரும்பிமிர்தார்
வெம்முரண் வேந்தரும் வெள்வளையார் தோள்விழைந்து
தம்மதில் தார்திறப்பர் தாழ். 24

பரிசினிலை:—

புரவலன் மகிழ்தூங்க
இரவலன் கடைக்கூடின்று.

வ-று. வெல்புரவி பூண்ட விளங்குமணித் திண்தேர்
நல்கிய பின்னு நனிநீடப்—பல்போர்
விலங்குங் கடல்தானை வேற்றார் முனைபோல்
கலங்கும் அளித்தென் கடும்பு. 25

பரிசில்விடை:—

வேந்தன் உள்மகிழ வெல்புகழ் அறைந்தோர்க்கு
ஈந்து பரிசில் இன்புற விடுத்தன்று.

வ-று. படைநவின்ற பல்களிறும் பண்ணமைந்த தேரும்
நடைநவின்ற பாய்மாவு நல்கிக்—கடையிறந்து
முன்வந்த மன்னர் முடிவணங்குஞ் சேவடியால்
பின்வந்தான் பேரருளி னான். 26

ஆள்வினைவேள்வி:—

வினைமுற்றிய கனைகழலோன்
மனைவேள்வி மலிவுரைத்தன்று.

வ-று. நின்ற புகழொடு நீடுவாழ்கிவ்வுலகில்
ஒன்ற வுயிர்களிப்ப ஓம்பலால்-வென்றமருள்
வாள்வினை நீக்கி வருக விருந்தென்னும்
ஆள்வினை வேள்வி அவன். 27

பாணாற்றுப்படை:—

சேணோங்கிய வரையதரில்
பாணனை ஆற்றுப்படுத்தன்று.

வ-று இன்தொடை நல்லிசை யாழ்ப்பாண எம்மைப்போல்
கன்றுடை வேழத்த கான்கடந்து—சென்றடையில்
காமரு சாயலாள் கேள்வன் கயமலராத்
தாமரை சென்னி தரும். 28

கூத்தராற்றுப்படை:—

ஏத்திச்சென்ற இரவலன்
கூத்தரை ஆற்றுபடுத்தன்று.

வ-று. கொலைவில் புருவத்துக் கொம்பன்னார் கூத்தின்
தலைவ தவிராது சேறி—சிலைகுலாங்
காரினை வென்ற கவிகையான் கைவளம்
வாரினை கொண்டு வரற்கு. 29

போருநராற்றுப்படை:—

பெருநல்லான் உழையீராகெனப்
பொருநனை ஆற்றுப்படுத்தன்று.

வ-று. தெருவில் அலமருந் தெண்கட் டடாரிப்
பொருவில் பொருநநீ செல்லில்—செருவில்
அடுந்தடக்கை நோன்றாள் அமர்வொய்யோன் ஈயும்
நெடுந்தடக்கை யானை நிரை 30

விறலியாற்றுப்படை:—

திறல்வேந்தன் புகழ்பாடும்
விறலியை ஆற்றுப்படுத்தன்று.

வ-று. சில்வளைக்கைச் செவ்வாய் விறலி செருப்படையான்
பல்புகழ் பாடிப் படர்தியேல்—நல்லவையோர்
ஏத்த இழையணிந்து இன்னே வருதியால்
பூத்த கொடிப்போல் பொலிந்து. 31

வாயுறைவாழ்த்து:—

பிற்பயக்கும் எஞ்சொல்லென
முற்படர்ந்த மொழிமிகுத்தன்று.

வ-று. என்சொல் எதிர்கொண்டு இகழான் வழிநிற்பில்
குஞ்சர வெல்படையான் கொள்ளானோ—எஞ்சும்
இகலிடன் இன்றி எறிமுந்நீர் சூழ்ந்த
அகலிட மங்கை அகத்து. 32

சேவியறிவுறூஉ:—

மறந்திரி வில்லா மன்பெருஞ் சூழ்ச்சி
அறந்தெரி கோலாற்கு அறிய வுரைத்தன்று.

வ-று. அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர்
தந்தைதாய் என்று இவர்க்குத் தார்வேந்தே—முந்தை
வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி
மொழிநின்று கேட்டல் முறை. 33

குடைமங்கலம்:—

நாற்றிசையும் புகழ்பெருக
வீற்றிருந்தான் குடைபுகழ்ந்தன்று.

வ-று. தன்னிழலோர் எல்லோர்க்குந்தண்கதிராந் தற்சேர
வெந்நிழலோர் எல்லோர்க்கும் வெங்கதிராம்-இன்னிழல்
மூவா விழுப்புகழ் முல்லைத்தார்ச் செம்பியன் [வேல்
கோவா யுயர்த்த குடை. 34

வாண்மங்கலம்:—

கயக்கருங் கடற்றானை
வயக்களிற்றான் வாள்புகழ்ந் தன்று.

வ-று. கொங்கவிழ் ஐம்பான் மடவார் வியன்கோயில்
மங்கலங் கூற மறங்கனலுஞ்—செங்கோல்
நிலந்தரியச் செல்லு நிறைதண்டார்ச் சேரன்
வலந்தரிய ஏந்திய வாள். 35

மண்ணுமங்கலம்:—

எண்ணருஞ் சீர்த்தியை இறைவன் எய்தி
மண்ணு மங்கல மறுவின்று கிளந்தன்று.

வ-று. கொங்கலர் கோதைக் குமரி மடநல்லார்
மங்கலங் கூற மலிபெய்திக்—கங்கையாள்
பூம்புனல் ஆகங் கெழீஇயினான் போரடுதோள்
வேம்பார் தெரியல்எம் வேந்து. 36

ஓம்படை:—

இன்னது செய்தல் இயல்பென இறைவன்
முன்னின்று அறிவன் மொழிதொடர்ந் தன்று.

வ-று. ஒன்றில் இரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்
வென்று களங்கொண்ட வேல்வேந்தே-சென்றுலாம்
ஆழ்கடல்சூழ் வையகத் துள்ளைந்துவென் றேழகற்றி
ஏழ்கடிந்து இன்புற்று இரு. 37

புறநிலைவாழ்த்து:—

வழிபடு தெய்வம் நின்புறங் காப்ப
வழிவழி சிறக்கென வாய்மொழிந் தன்று.

வ-று. கொடிபடு முத்தலைவேல் கூற்றக் கணிச்சிக்
கடிபடு கொன்றை யான்காப்ப—நெடிதுலகில்
பூமலி நாவற் பொழிலகத்துப் போய்நின்ற
மாமலைபோல் மன்னுக நீ. 38

கொடிநிலை:—

மூவர் கொடியுள்ளும் ஒன்றொடு பொரீஇ
மேவரு மன்னவன் கொடிபுகழ்ந் தன்று.

வ-று. பூங்கண் நெடுமுடிப் பூவைப்பூ மேனியான்
பாம்புண் பறவைக் கொடிபோல—ஓங்குக
பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
கொல்யானை மன்னன் கொடி. 39

கந்தழி:—

சூழநேமியான் சோர்வெறிந்த
வீழாச்சீர் விறன்மிகுத்தன்று.

வ-று. மாயவன் மாயம் அதுவான் மணிநிரையுள்
ஆயனா வெண்ணல் அவனருளால்—காயக்
கழல்அவிழக் கண்கனலக் கைவளையார் சோரச்
சுழல்அழலுள் வைகின்று சோ. 40

வள்ளி:—

பூண்முலையார் மனநெக
வேலனொடு வெறியாடின்று.

வ-று. வேண்டுதியால் நீயும் விழைவோ விழுமிதே
ஈண்டியம் விம்ம இனவளையார்—பூண்தயங்கச்
சூலமொ டாடுஞ் சுடர்ச்சடையோன் காதலற்கு
வேலனோ டாடும் வெறி. 41

புலவராற்றுப்படை:—

இருங்கண்வானத்து இமையோர்உழைப்
பெரும்புலவனை யாற்றுப்படுத்தன்று.

வ-று. வெறிகொள் அறைஅருவி வேங்கடத்துச் செல்லில்
நெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்கு
இருளீயு ஞாலத் திடரெல்லா நீங்க
அவருளீயு மாழி யவன். 42

புகழ்ந்தனர்பரவல்:—

இன்னதொன் றெய்துதும் இருநிலத்தி யாமெனத்
துன்னருங் கடவுள் தொடுகழல் தொழுதன்று.

வ-று. சூடிய வான்பிறையோய் சூழ்சுடலை நீற்றரங்கத்து
ஆடி யசையா அடியிரண்டும்—பாடி
உரவுநீர் ஞாலத்து உயப்போக வென்று
பரவுதும் பல்கால் பணிந்து. 43

பழிச்சினர்பணிதல்:—

வயங்கியபுகழ் வானவனைப்
பயன்கருதிப் பழிச்சினர்ப் பணிந்தன்று.

வ-று. ஆடல் அமைந்தான் அடியடைந்தார் என்பெறார்
ஓடரி உண்கண் உமைஒருபால்—கூடிய
சீர்சால் அகலத்தைச் செங்கண் அழனாகந்
தாராய்த் தழுவப் பெறும். 44

கைக்கிளை:—

தண்டாக் காதல் தளரிய தலைவன்
வண்டார் விரும்பிய வகையுரைத் தன்று.

வ-று. மங்குல் மனங்கவர மான்மாலை நின்றேற்குப்
பொங்கும் அருவிப் புனனாடன்—கங்குல்
வருவான்கொல் வந்தென் வனமுலைமேல் வைகித்
தருவான்கொல் மார்பணிந்த தார். 45

பெருந்திணை:—

பெய்கழற் பெருந்தகை பேணா முயக்கிவர்ந்து
மல்கிருள் செல்வோள் வகையுரைத் தன்று.

வ-று. வயங்குளைமான் தென்னன் வரையகலந் தோய
இயங்கா இருளிடைச் செல்வேன்—மயங்காமை
ஓடரிக் கண்ணாய் உறைகழிவாள் மின்னிற்றான்
மாட மறுகின் மழை. 46

புலவிபொருளாகத் தோன்றிய பாடாண் பாட்டு:—

வில்லேர் நுதலி விறலோன் மார்பம்
புல்லேம் யாமெனப் புலந்துரைத் தன்று.

வ-று. மலைபடு சாந்த மலர்மார்ப யாம்நின்
பலர்படி செல்வம் படியேம்—புலர்விடியல்
வண்டினங் கூட்டுண்ணும் வயல்சூழ் திருநகரில்
கண்டனங் காண்டற்கு இனிது. 47

கடவுண்மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்த பக்கம்:—

இமையா நாட்டத் திலங்கிழை மகளிர்
அமையாக் காதல் அமரரை மகிழ்ந்தன்று.

வ-று நல்கெனின் நாமிசையாள் நோமென்னுஞ் சேவடிமேல்
ஒல்கெனின் உச்சியாள் நோமென்னு—மல்கிருள்
ஆட லமர்ந்தாற் கரிதா லுமையாளை
ஊட லுணர்த்துவதோ ராறு. 48

கடவுள்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கம்:—

முக்கணான் முயக்கம்வேட்ட
மக்கட்பெண்டிர் மலிவுரைத்தன்று.

வ-று. அரிகொண்ட கண்சிவப்ப அல்லினென் னாகம்
புரிகொண்ட நூல்வடுவாப் புல்லி—வரிவண்டு
பண்ணலங் கூட்டுண்ணும் பனிமலர்ப் பாரூரன்
உண்ணலங் கூட்டுண்டான் ஊர். 49

குழவிக்கட் டோன்றிய காமப் பகுதி:—

இளமைந்தர் நலம் வேட்ட
வளமங்கையர் வகையுரைத் தன்று.

வ-று. வரிப்பந்து கொண்டொளித்தாய் வாள்வேந்தன் மைந்தா
அரிக்கண்ணி அஞ்சி அலற—எரிக்கதிர்வேல்
செங்கோலன் உங்கோச் சினக்களிற்றின்மேல்வரினும்
எங்கோலந் தீண்டல் இனி. 50

ஊரின்கண்தோன்றிய காமப்பகுதி:—

நீங்காக் காதன் மைந்தரும் மகளிரும்
பாங்குறக் கூடும் பதியுரைத் தன்று.

வ-று. ஊடிய ஊடல் அகல உளநெகிழ்ந்து
வாடிய மென்தோள் வளையொலிப்பக்--கூடியபின்
யாமநீ டாகென்ன யாழ்மொழியார் கைதொழூஉம்
ஏமநீர்க் கச்சிஎம் மூர். 51

பத்தாவது

பொதுவியற் படலம்

சீர்சால் போந்தை வேம்பொ டாரே
உன்ன நிலையே ஏழக நிலையே
கழனிலை யேனைக் கற்காண் டல்லே
கற்கோள் நிலையே கன்னீர்ப் படுத்தல்
கன்னடு தல்லே கன்முறை பழிச்சல்
இற்கொண்டு புகுதல் எனப்பன் னிரண்டும்
பொதுவியற் பால என்மனார் புலவர்.

போந்தை :—

கலவா மன்னர் கண்ணுறு ஞாட்பில்
புலவேல் வானவன் பூப்புகழ்ந் தன்று.

வ-று. குடையலர் காந்தள்தன் கொல்லிச் சுனைவாய்த்
தொடையவிழ் தண்குவளை சூடான்—புடைதிகழுந்
தேர்அதிரப் பொங்குந் திருந்துவேல் வானவன்
போரெதிரில் போந்தையாம் பூ. 1

வேம்பு:—

விரும்பார் அமரிடை வெல்போர் வழுதி
சுரும்பார் முடிமிசைப் பூப்புகழ்ந் தன்று.

வ-று. தொடியணிதோள் ஆடவர் தும்பை புனையக்
கொடியணிதேர்க் கூட்டணங்கும் போழ்தில்—முடியணி [யும்
காத்தல்சால் செங்கோல் கடுமா நெடுவழுதி
ஏத்தல்சால் வேம்பின் இணர். 2

ஆர்:—

விறற்படை மறவர் வெஞ்சமங் காணின்
மறப்போர்ச் செம்பியன் மலைபூ வுரைத்தன்று.

வ-று. கொல்களிறு ஊர்வர் கொலைமலி வாள்மறவர்
வெல்கழல் வீக்குவர் வேல் இளையர்—மல்குங்
கலங்கல் ஒலிபுனல் காவிரி நாடன்
நலங்கல் அமராழுவத் தார். 3

உன்னநிலை:—

துன்னருஞ் சிறப்பில் தொடுகழல் மன்னனை
உன்னஞ் சேர்த்தி உறுபுகழ் மலிந்தன்று.

வ-று. துன்னருந் தானைத் தொடுகழலான் துப்பெதிர்ந்து
முன்னவர் வணங்கார் முரண்முருங்க—மன்னரும்
ஈடெலாந் தாங்கி இகலவிந்தார் நீயுநின்
கோடெலா முன்னங் குழை. 4

ஏகநிலை:—

ஏழக மூரினும் இன்னன் என்றவன்
தாழ்வில் ஊக்கமொடு தகைபுகழ்ந் தன்று.

வ-று. எம்மனை யாமகிழ வேழக மேற்கொளினுந்
தம்மதில் தாழ்வீழ்த் திருக்குமே—தெம்முனையுள்
மானொடு தோன்றி மறலுங்கால் ஏழகத்
தானொடு நேராம் அரசு. 5

இதுவுமது:—

ஏந்துபுகழ் உலகின் இமைநோக்கான்
வேந்து நிற்றலு மேழக நிலையே.

வ-று. வேண்டார் பெரியர் விறல்வேலோன் தானிளையன்
பூண்டான் பொழில்காவல் என்றுரையாம்-ஈண்டும்
அருளன்மின் கோள்கருது மால்வரை யாளிக்
குருளையுங் கொல்களிற்றின் கோடு. 6

கழனிலை:—

அடுமுரண் அகற்றும் ஆளுகு ஞாட்பில்
கடுமுரண் வயவன் கழல்புனைந் தன்று.

வ-று. வாள் அமரின் முன்விலக்கி வான்படர்வார் யார்கொலோ
கேள் அல்லார் நீக்கிய கிண்கிணிக்கால்-காளை
கலங்கழல் வாயில் கடுத்தீற்றி யற்றால்
பொலங்கழல் கான்மேற் புனைவு. 7

கற்காண்டல்:—

ஆறு வென்றி அமரில் வீழ்ந்தோர்க்குக்
கான நீளிடைக் கற்கண் டன்று.

வ-று. மிகையணங்கு மெய்ந்நிறீஇ மீளி மறவர்
புகையணங்கப் பூமாரி சிந்திப்—பகையணங்கும்
வீளைக் கடுங்கணையால் வேறாகி விண்படர்ந்த
காளைக்குக் கண்டமைத்தார் கல். 8

கற்கோள்நிலை:—

மண்மருளத் துடிகறங்க
விண்மேயாற்குக் கற்கொண்டன்று.

வ-று. பூவொடு நீர்தூவிப் பொங்க விரைபுகைத்து
நாவுடை நன்மணி நன்கியம்ப—மேவார்
அழல்மறங் காற்றி அவிந்தாற்கென் றேத்திக்
கழல்மறவர் கைக்கொண்டார் கல். 9

கன்னீர்ப்படுத்தல்:—

வண்டுசூழ் தாமம் புடையன வாகக்
கண்டு கொண்ட கன்னீர்ப் படுத்தன்று.

வ-று. காடு கனலக் கனலோன் சினஞ்சொரியக்
கூடிய வெம்மை குளிர்கொள்ளப்—பாடி
நயத்தக மண்ணி நறுவிரைகொண் டாட்டிக்
கயத்தகத் துய்த்திட்டார் கல். 10

இதுவுமது:—

ஓங்கியகல் லுய்த்தொழுக்கல்
ஆங்கெண்ணினு மத்துறையாகும்.

வ-று. கணனூர்ந்து உவப்பக் கடுங்கண் மறவர்
பிணனூர்ந்து பேய்வழங்கு ஞாட்பில்—நிணனூர்
விழுக்கினல் வேய்ந்த விறல்வேலோர் கல்லை
ஒழுக்கினர் ஒன்றொருவர் முன். 11

கல் நடுதல்:—

அவன்பெயர் கல்மிசைப் பொறித்துக்
கவின்பெறக் கல்நாட்டின்று.

வ-று. மாலை துயல மணியெறிந்து மட்டுகுத்துப்
பீலி யணிந்து பெயர்பொறித்து—வேல்அமருள்
ஆண்டக நின்ற அமர்வெய்யோற் காகஎன்று
காண்டக நாட்டினர் கல். 12

கல்முறைபழிச்சல்:—

நிழல்அவிழ் எழின்மணிப்பூண்
கழல்வெய்யோன் கல்வாழ்த்தின்று.

வ-று. அடும்புகழ் பாடிஅழுதழுது நோனாது
இடும்பையுள் வைகி இருந்த—கடும்பொடு
கைவண் குரிசில் கல்கைதொழூஉச் செல்பாண
தெய்வமாய் நின்றான் திசைக்கு. 13

இற்கொண்டு புகுதல்:—

வேத்தமருள் விளிந்தோன் கல்லென
ஏத்தினர் துவன்றி இல்கொண்டு புக்கன்று

வ-று. வாள்புகா வூட்டி வடிமணி நின்றியம்பக்
கோட்புலி யன்ன குரிசில்கல்—ஆள்கடிந்து
வில்கொண்ட வென்றி விறல்மறவர் எல்லோரும்
இல்கொண்டு புக்கார் இயைந்து. 14

சிறப்பிற் பொது வியற்பால

சூத்திரம். 11.

முதுபாலையே சுரநடையேனைத்
தபுதார நிலையே தாபத நிலையே
தலைப்பெய னிலையே பூசன் மயக்கே

மாலை நிலையே மூதா னந்தம்
ஆனந் தம்மே ஆனந்தப் பையுள்
கையறு நிலையுளப் படப்பதி னொன்று
மையறு சிறப்பில் பொது வியற்பால.

முதுபாலை:—

காம்புயர் கடத்திடைக் கணவனை யிழந்த
பூங்கொடி மடந்தை புலம்புரைத் தன்று.

வ-று. நீர்மலி கண்ணோடு நின்றேன் நிலையிரங்காய்
தார்மலி மார்பன் தகையகலஞ்—சூர்மகளே
வெள்ளில் விளைவுதிரும் வேயோங்கும் வெஞ்சுரத்துக்
கொள்ளல்நீ கோடல் கொடிது. 1

சுரநடை:—

மூதரில் நிவந்த முதுகழை யாரிடைக்
காதலி யிழந்த கணவன்நிலை யுரைத்தன்று.

வ-று. உரவெரி வேய்ந்த உருப்பவிர் கானுள்
வரவெதிரின் வைவேல்வாய் வீழ்வாய்—கரவினால்
பேதையைப் பெண்ணியலைப் பெய்வளையை என்மார்பில்
கோதையைக் கொண்டொளித்த கூற்று. 2

தபுதாரநிலை:—

புனையி ழைஇழந்தபிற் புலம்பொடு வைகி
மனையகத் துறையு மைந்தன்நிலை யுரைத்தன்று.

வ-று. பைந்தொடி மேல்உலக மெய்தப் படருழந்த
மைந்தன் குரிசின் மழைவள்ளல்—எந்தை
தவுதாரத் தாழ்ந்த தனிநிலைமை கேளாச்
செவிடாய் ஒழிகென் செவி. 3

தாபதநிலை:—

குருந்தலர் கண்ணிக் கொழுநன் மாய்ந்தெனக்
கருந்தடங் கண்ணி கைம்மைகூ றின்று.

வ-று. கலந்தவனைக் கூற்றங் கரப்பக் கழியாது
அலந்தினையும் அவ்வளைத் தோளி—உலந்தவன்
தாரொடு பொங்கி நிலனசைஇத் தான்மிசையுங்
காரடகின் மேல்வைத்தாள் கை. 4

தலைப்பெயனிலை:—

இன்கதிர் முறுவற் பாலகன் என்னுந்
தன்கடன் இறுத்ததாய் தபுநிலை யுரைத்தன்று.

வ-று. இடம்படு ஞாலத்து இயல்போ கொடிதே
தடம்பெருங்கட் பாலகன் என்னும்—கடன்கழித்து
முள்ளெயிற்றுப் பேதையாள் புக்காள் முரணவியா
வள்ளெயிற்றுக் கூற்றத்தின் வாய். 5

பூசன்மயக்கு:—

பல்லிதழ் மழைக்கண் பாலகன் மாய்ந்தெனப்
புல்லிய பெருங்கிளைப் பூசல்கூ றின்று.

வ-று. அலர்முலை அஞ்சொல் அவண் ஒழிய அவ்விற்
குலமுதலைக் கொண்டொளித்தல் அன்றி—நிலமுறப்
புல்லிய பல்கிளைப் பூசல் பரியுமோ
கொல்லிய வந்தொழியாக் கூற்று. 6

இதுவுமது:—

வேந்தன் மாய்ந்தென வியலிடம் புலம்பினும்
ஆய்ந்த புலவர் அதுவென மொழிப.

வ-று. எண்ணின் இகல்புரிந்தார் எய்தாத தில்போலும்
கண்ணின் ஒளிர்வேலான் கரந்தபின்—அண்ணல்

புகழொடு பூசல் மயங்கிற்றால் பொங்கும்
அகழ்கடல் வேலி அகம். 7

மாலைநிலை:—

கதிர்வேல் கணவனொடு கனையெரி மூழ்க
மதியேர் நுதலி மாலைநின் றன்று.

வ-று. சோலை மயிலன்னாள் தன்கணவன் சொல்லியசொல்
மாலை நினையா மனங்கடைஇக்—காலைப்
புகையழல் வேலான் புணர்ப்பாகி நின்றாள்
அகையழல் ஈமத் தகத்து. 8

மூதானந்தம்:—

கயலேர் கண்ணி கணவனொடு முடிய
வியல்நெறிச் செல்வோர் வியந்துரைத் தன்று.

வ-று. ஒருயி ராக வுணர்க உடன்கலந்தார்க்கு
ஈருயிர் என்பர் இடைதெரியார்—போரில்
விடனேந்தும் வேலாற்கும் வெள்வளையி னாட்கும்
உடனே யுலந்த துயிர். 9

இதுவுமது:—

கொடியான் கூர்ங்கணை குளிப்பத் தன்தொழில்
முடியான் அவிதலு மூதா னந்தம்.

வ-று. முந்தத்தான் மாவொடு புக்கு முனையமருட்
சிந்தத்தான் வந்தார் செருவிலக்கிக்—குந்தத்தால்
செல்கணை மாற்றிக் குரிசில் சிறைநின்றான்
கொல்கணைவாய் வீழ்தல் கொடிது. 10

ஆனந்தம்:—

ஆடமைத் தோளி விருச்சியுஞ் சொகினமும்
வேறுபட அஞ்சி விருப்புற் றன்று.

வ-று. வேந்தார்ப்ப வெஞ்சமத்து வேலமூவந் தாங்கினன்
சாந்தார் அகலத்து தாழ்வடுப்புண்—தாந்தணியா
மன்னு சொகின மயங்கின வாய்ப்புளும்
என்னுங்கொல் பேதை இனி. 11

இதுவுமது:—

தவப்பெரிய வெஞ்சமங்குறுகும்
அவற்கிரங்கினும் அத்துறையாகும்.

வ-று. இன்னு சொகினம் இசையா விரிச்சியும்
மன்னு வலம்வரும்என் ஆருயிரும்—என்னுங்கொல்
தொக்கார் மறமன்னர் தோலாத் துடிகறங்கப்
புக்கான் விடலையும் போர்க்கு. 12

ஆனந்தப்பையுள்:—

விழுமங் கூர வேய்த்தோள் அரிவை
கொழுநன் வீயக் குழைந்துயங் கின்று.

வ-று. புகழொழிய வையகத்துப் பூங்கழற் காளை
திகழொளி மாவிசும்பு சேர—இகழ்வார்முன்
கண்டே கழிகாதல் இல்லையாற் கைசோர்ந்தும்
உண்டே அளித்தென் னுயிர். 13

கையறுநிலை:—

செய்கழல் மன்னன் மாய்ந்தெனச் சேர்ந்தோர்
கையற வுரைத்துக் கைசோர்ந் தன்று.

வ-று. தாயன்னன் தார்விலக்கி வீழத் தளர்வொடு
நீயென்னுய் நின்றுய்என் நெஞ்சளியை—ஈயென்றூர்க்கு
இல்லென்றதுஎற்று இகல்வெய்யோன் விண்படரப்
புல்லென்ற நாப்புலவர் போன்று. 14

இதுவுமது:—

கழிந்தோன் தன்புகழ் காதலித் துரைப்பினும்
மொழிந்தனர் புலவர் அத்துறை யென்ப.

வ-று. நின்று நிலமிசையோர் ஏத்த நெடுவிசும்பில்
சென்று கழிந்தான் செருவெய்யோன்—என்றும்
அழலுங் கதிர்வேல் அவன்புகழ் பாடி
உழலும் உலகத் துயிர். 15

காஞ்சிப் பொதுவியற் பால

சூத்திரம் 12

முதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சி
பெருங்காஞ் சிய்யே பொருண்மொழிக் காஞ்சி
புலவர் ஏத்தும் புத்தேள் நாட்டொடு
முதுகாஞ் சிய்யொடு காடுவாழ்த் தளப்பட
மையறு சீர்த்தி வருமிரு மூன்றும்
பொய்தீர் காஞ்சிப் பொதுவியற் பால.

முதுமொழிக்காஞ்சி:—

பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்
உலகியல் பொருண்முடிபு உணரக் கூறின்று.

வ-று. ஆற்றின் உணரின் அருள்அறமாம் ஆற்றூர்க்குப்
போற்றூர் வழங்கில் பொருள்பொருளாம்—ஆற்றிப்
புகலா தொழுகும் புரிவளையார் மென்றோள்
அகலாது அளித்தொழுகல் அன்பு. 1

பெருங்காஞ்சி:—

மலையோங்கிய மாநிலத்து
நிலையாமை நெறியுரைத்தன்று.

வ-று. ஆயாது அறிவயர்ந்து அல்லாந்து அகலிடத்து
மாயா நிதிய மனைச்செறீஇ—ஈயாது
இறுகப் பொதியன்மின் இன்றொடு நாளைக்
குறுக வருமரோ கூற்று. 2

பொருண்மொழிக்காஞ்சி:—

எரிந்து இலங்குஞ் சடைமுடி முனிவர்
புரிந்து கண்ட பொருள்மொழிந் தன்று.

வ-று. ஆய பெருமை அவிர்சடையோர் ஆய்ந்துணர்ந்த
பாய நெறிமேல் படர்ந்தொடுங்கித்—தீய
இருளொடு வைகாது இடம்படு ஞாலத்து
அருளொடு வைகி யகல். 3

புலவரேத்தும் புத்தேள்நாடு:—

நுழைபுலம் படர்ந்த நோயறு காட்சி
விழைபுலங் கடந்தோர் வீடுரைத் தன்று.

வ-று. பொய்யில் புலவர் புரிந்துறையும் மேலுலகம்
ஐயமொன் றின்றி அறிந்துரைப்பின்—வெய்ய
பகலின்று இரவின்று பற்றின்று துற்றின்று
இகலின்று இளிவரவும் இன்று. 4

முதுகாஞ்சி:—

தலைவரும் பொருளைத் தக்காங்கு உணர்த்தி
நிலைநிலை யாமை நெறிப்பட வுரைத்தன்று.

வ-று. இளமை நிலைதளர மூப்போடு இறைஞ்சி
உளமை யுணராது ஒடுங்கி—வளமை

வியப்போவல் இல்லா வியலிடத்து வெஃகாது
உயப்போகல் எண்ணின் உறும். 5

காடுவாழ்த்து:—

பல்லவர்க் கிரங்கும் பாடிமிழ் நெய்தல்
கல்லென் றொலிக்குங் காடுவாழ்த் தின்று.

வ-று. முன்புறந் தான்காணு மிவ்வுலகை இவ்வுலகில்
தன்புறங் கண்டறிவார் தாமில்லை—அன்பின்
அழுதார்கண் ணீர்விடுத்த ஆறுடிக் கூகை
கழுதார்ந்து இரவழுங்குங் காடு. 6

முல்லைப் பொதுவியற் பால

சூத்திரம் 13

சீர்சான் முல்லையொடு கார்முல்லை யென்று
தேர்முல்லை யொடு நாண்முல்லை யென்று
இல்லாண் முல்லையொடு பகட்டுமுல்லை யென்று
பான்முல் லையொடு கற்புமுல்லை யென்றாங்கு
இருநான் முல்லையும் பொதுவியற் பால.

முல்லை:—

தடவரை மார்பன் தன்னமர் காதல்
மடவரல் புணர்ந்த மகிழ்ச்சிநிலை யுரைத்தன்று.

வ-று. ஊதை உளர ஒசிந்து மணங்கமழும்
கோதைபோல் முல்லைக் கொடிமருங்குல்—பேதை
குவைஇ யிணைந்த குவிமுலை யாகங்
கவைஇக் கவலை யிலம்.

கார்முல்லை:—

அருந்திறல் கட்டோர் அவர்வா ரர்முன்
கருங்கடல் முகந்து கார்வந் தன்று.

வ-று. புனையும்பொலம்படைப் பொங்குளைமான் திண்டேர்
துனையுந் துனைபடைத் துன்னார்—முனையுள்
அடல்முகந்த தானை அவர்வாரா முன்னம்
கடல்முகந்து வந்தன்று கார். 2

தேர்முல்லை:—

உருத்தெழு மன்னர் ஒன்னார் தங்கிலை
திருத்திய காதலர் தேர்வர வுரைத்தன்று.

வ-று. தீர்ந்து வணங்கித் திறையளப்பத் தெம்முனையுள்
ஊர்ந்துநங் கேள்வர் உழைவந்தார்—சார்ந்து
பரிகோட்டம் இன்றிப் பதவார்ந்து உகளுந்
திரிகோட்ட மாவிரியத் தேர். 3

நாண்முல்லை:—

செறுநர் நாணச் சேயிழை அரிவை
வறுமனை வைகித் தற்காத் தன்று.

வ-று. கொய்தார மார்பில் கொழுநன் தணந்தபின்
பெய்வளை யாட்குப் பிறிதில்லை—வெய்ய
வளிமறையு மின்றி வழக்கொழியா வாயில்
நளிமனைக்கு நற்றுணை நாண். 4

இல்லாண்முல்லை:—

கழுமிய காதற் கணவனைப் பழிச்சி
இழுமென் சீர்த்தி இல்மலிபு உரைத்தன்று.

வ-று. கல்லெனீர் வேலிக் கணவன் கழல்வாழ்த்தி
ஒல்லும் வகையால் விருந்தோம்பிச்—செல்லுந்தம்
இற்செல்வம் அன்றி இரந்தவர்க்கு ஈகல்லாப்
புற்செல்வம் பூவா புகழ். 5

பகட்டுமுல்லை:—

வயன்மிகு சிறப்பின் வருத்தமும் நோன்மையும்
வியன்மனைக் கிழவனைப் பகட்டொடு பொரீஇயன்று.

வ-று. உய்த்தல் பொறுத்தல் ஒழிவின்றி ஒலிவயலுள்
எய்த்தல் அறியாது இடையின்றி—வைத்த
படுநுகம் பூண்ட பகட்டொடு மானு
நெடுமொழி எங்கணவன் நேர். 6

பான்முல்லை:—

அரிபாய் உண்கண் ஆயிழைப் புணர்ந்தோன்
பரிவகல் உள்ளமொடு பால்வாழ்த் தின்று.

வ-று. திங்கள் விளங்குந் திகழ்ந்திலங்கு பேரொளி
அங்கண் விசும்பின் அகத்துறைக—செங்கட்
குயிலனைய தேமொழிக் கூரெயிற்றுச் செவ்வாய்ப்
பயில்வளையை நல்கிய பால். 7

கற்புமுல்லை:—

பொன்திகழ் சுணங்கில் பூங்கண் அரிவை
நன்றறி கொழுநனை நலமிகுத் தன்று.

வ-று. நெய்கொள் நிணந்தூ நிறைய அமைத்திட்ட
குய்கொள் அடிசில் பிறர்நுகர்க—வைகலும்
அங்குழைக் கீரை அடகு மிசையினும்
எங்கணவன் நல்கல் இனிது. 8

இதுவுமது:—

மேவருங் கணவன் தணப்பத் தன்வயின்
காவல் கூறினும் அத்துறை யாகும்.

வ-று. மௌவல் விரியும் மணங்கமழ் மான்மாலைத்
தௌவன் முதுகுரம்பைத் தான்றமியள்--செல்வன்
இறைகாக்கும் இவ்வுலகில் இல்பிறந்த நல்லாள்
நிறைகாப்ப வைகும் நிறை. 9

இதுவுமது:—

திருவளர் நன்னகர் அடைந்த கொழுநன்
பெருவள மேத்தினும் அத்துறை யாகும்.

வ-று. ஊழிதோ றூழி தொழப்பட்டு உலைவின்றி
ஆழிநீர் வையத்து அகமலிய—வாழி
கருவரை மார்பில்எங் காதலன் நல்க
வருவிருந் தோம்பும் வளம். 10

பதினொன்றாவது

கைக்கிளைப் படலம்

ஆண்பாற் கூற்று

சூத்திரம் 14

காட்சி யையந் துணிவே யுட்கோள்
பயந்தோர்ப் பழிச்சல் நலம்பா ராட்டல்
நயப்புற் றிரங்கல் புணரா இரக்கம்
வெளிப்பட இரத்தல் என இவ் வொன்பதும்
ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை யாகும்.

காட்சி:—

சுரும்பிவர் பூம்பொழிற் சுடர்வேல் காளை
கருந்தடங் கண்ணியைக் கண்டுநயந் தன்று.

வ-று. கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய் தளிரா
அரும்பிவர் மென்முலை தொத்தாப்—பெரும்பணைத்தோள்
பெண்தகைப் பொலிந்த பூங்கொடி
கண்டேங் காண்டலுங் களித்தளங் கண்ணே. 1

ஐயம்:—

கன்னவில் தோளான் கண்டபின் அவளை
இன்னள்என் றுணரான் ஐயமுற் றன்று.

வ-று. தாமரைமேல் வைகிய தையல்கொள் தாழ்தளிரில்
காமருவும் வானோர்கள் காதலிகொள்—தேமொழி
மையமர் உண்கண் மடந்தைகண்
ஐயம் ஒழியாது ஆழும்என் நெஞ்சே.. 2

துணிவு:—

மாநிலத்து இயலும் மாதர் ஆமெனத்
தூமலர்க் கோதையைத் துணிந்துரைத் தன்று.

வ-று. திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும்—அரிபரந்த
போகிதழ் உண்கணும் இமைக்கும்
ஆகும் மற்றிவள் அகலிடத் தணங்கே. 3

உட்கோள்:—

இணரார் கோதைஎன் நெஞ்சத்து இருந்தும்
உணராள் என்னைஎன வுட்கொண் டன்று.

வ-று. கவ்வை பெருகக் கரந்தென் மனத்திருந்துஞ்
செவ்வாய்ப் பெருந்தோள் திருநுதலாள்—அவ்வாயில்

அஞ்சொல் மாரிபெய்து அவியாள்
நெஞ்சம் பொத்தி நிறைசுடு நெருப்பே. 4

பயந்தோர்ப்பழிச்சல்:—

இவன்பயந் தெடுத்தோர் வாழியர் நெடிதென
அவள்பயந் தோரை ஆனது புகழ்ந்தன்று.

வ-று. கல்லருவி ஆடிக் கருங்களிறு கார்அதிரும்
மல்லலஞ் சாரல் மயிலன்ன—சில்வளைப்
பலவொலி கூந்தலைப் பயந்தோர்
நிலவரை மலிய நீடுவா ழியரே. 5

நலம்பாராட்டல்:—

அழிபடர் எவ்வங் கூர ஆயிழை
பழிதீர் நன்னலம் பாராட் டின்று.

வ-று. அம்மென் கிளவி கிளிபயில ஆயிழை
கொம்மை வருமுலை கோங்கரும்ப—இம்மலை;
நறும்பூஞ் சாரல் ஆங்கண்
குறுஞ்சுனை மலர்ந்தன தடம்பெருங் கண்ணே. 6

நயப்புற்றிரங்கல்:—

கொய்தழை அல்குல் கூட்டம் வேண்டி
எய்துதல் அருமையில் நிறப்பப் புகழ்ந்தன்று.

வ-று. பெருமட நோக்கின் சிறுநுதல் செவ்வாய்க்
கருமழைக்கண் வெண்முறுவற் பேதை—திருமுலை
புல்லும் பொறியி லேனுழை
நில்லாது ஓடும்என் நிறையில் நெஞ்சே. 7

புணராவிரக்கம்:—

உணரா வெவ்வம் பெருக ஒளியிழைப்
புணரா இரக்கமொடு புலம்புதர வைகின்று.

வ-று. இணரார் நறுங்கோதை எல்வளையாள் கூட்டம்
புணராமற் பூசல் தரவும்—உணராது
தண்டார் விழுப்படர் நலியவும்
உண்டால் என்னுயிர் ஓம்புதற் கரிதே. 8

வெளிப்படவிரத்தல்:—

அந்தழை அல்குல் அணிநலம் புணரா
வெந்துயர் பெருக வெளிப்பட இரந்தன்று.

வ-று. உரவொலி முந்நீர் உலாய்நிமிர்ந் தன்ன
கரவருங் காமங் கனல—இரவெதிர
முள்ளெயிறு இலங்கும் முகிழ்நகை
வெள்வளை நல்காள் விடுமென் உயிரே. 9

பெண்பாற் கூற்று

சூத்திரம் 15

காண்டல் நயத்தல் உட்கோள் மெலிதல்
மெலிவொடு வைகல் காண்டல் வலித்தல்
பகன்முனி வுரைத்தல் இரவுநீடு பருவரல்
கனவில் அரற்றல் நெஞ்சொடு மெலிதல்
பெண்பாற் கூற்றுக் கைக்கிளை யாகும்.

காண்டல்:—

தேம்பாய் தெரியல் விடலையைத் திருநுதல்
காம்பேர் தோளி கண்டுசோர்ந் தன்று.

வ-று. கடைநின்று காமம் நலியக் கலங்கி
இடைநின்ற ஊரலர் தூற்றப்—புடைநின்ற

எற்கண் டிலன்அந் நெடுந்தகை
தற்கண் டன்என்யான் கண்ட வாறே. 1

நயத்தல்:—

கன்னவில் திணிதோட் காளையைக் கண்ட
நன்னுதல் அறிவை நயப்புரைத் தன்று.

வ-று. கன்னவில் தோளானைக் காண்டலுங் கார்க்குவளை
அன்னஎன் கண்ணுக் கமுதமாம்—என்னை
மலைமலிந் தன்ன மார்பம்
முலைமலிந் தாழ்ம் முயங்குங் காலே. 2

உட்கோள்:—

வண்டமர் குஞ்சி மைந்தனை நயந்த
ஒண்டொடி அரிவை உட்கொண் டன்று.

வ-று. உள்ளம் உருக ஒளிவளையுங் கைநில்லா
கள்ளவிழ் தாரானுங் கைக்கணையால்—தெள்ளிச்
சிறுபுன் மாலை தலைவரின்
உறுதுயர் அவலத்து உயலோ அரிதே. 3

மெலிதல்:—

ஒன்றூர் கூறும் உறுபழி நாணி
மென்தோள் அரிவை மெலிவொடு வைகின்று.

வ-று. குரும்பை வரிமுலைமேல் கோல நெடுங்கண்
அரும்பிய வெண்முத்து உகுப்பக்—கரும்புடைத்
காதல்செய் காமங் கனற்ற [தோள்
ஏதில் ஆளற்கு இழந்தன்என் எழிலே. 4

மெலிவொடுவைகல்:—

மணிவளை நெகிழ மாநலந் தொலைய
அணியிழை மெலிவின் ஆற்றல்கூ றின்று.

வ-று. பிறைபுரை வாள்நுதல் பீரரும்ப மென்தோள்
இறைபுனை எல்வளை ஏக—நிறைபுணையா
யாம நெடுங்கடல் நீந்துவேன்
காம ஒள்ளெரி கனன்றகஞ் சுடுமே. 5

காண்டல் வலித்தல்:—

மைவரை நாடனை மடந்தை பின்னரும்
கைவளை சோரக் காண்டல் வலித்தன்று.

வ-று. வேட்டவை எய்தி விழைவொழிதல் பொய்போலும்
ஈட்டும் இடைமணிப் பூணுனைக்—காட்டென்று
மாமை பொன்னிறம் பசப்பத்
தூமலர் நெடுங்கண் துயில்துறந் தனவே. 6

பகன்முனி வுரைத்தல்:—

புரிவளை நெகிழப் புலம்பொடு நின்றாள்
பருவரல் உள்ளமொடு பகன்முனிவுரைத்தன்று.

வ-று. தன்கண் அளியவாய் நின்றேற்குத் தார்விடலை
வன்கண்ணன் நல்கான் எனவாடும்—என்கண்
இடரினும் பெரிதால் எவ்வம்
படரினும் பெரிதால் பாவியிப் பகலே. 7

இரவுநீடுபருவரல்:—

புலம்பொடு வைகும் பூங்குழை கங்குல்
கலங்கினேன் பெரிதெனக் கசிந்துரைத் தன்று.

வ-று. பெண்மேல் நலிவு பிழையென்னாய் பேதுறீஇ
விண்மேல் இயங்கும் மதிவிலக்கி—மண்மேல்
நினக்கே செய்பகை எவன்கொல்
எனக்கே நெடியை வாழியர் இரவே. 8

கனவில் அரற்றல்:—

ஒண்தொடி மடந்தை உருகெழு கங்குலில்
கண்டவன் கரப்பக் கனவில் அரற்றின்று.

வ-று. அயர்வொடு நின்றேன் அரும்படர் நோய்தீர
நயவரும் பள்ளிமேல் நல்கிக்—கயவாா
நனவிடைத் தமியேன் வைகக்
கனவிடைத் தோன்றிக் கரத்தல்நீ கொடிதே. 9

இதுவுமது:—

பெய்வளை அவனொடு பேணிய கங்குல்
உய்குவன் வரின்என உரைப்பினும் அதுவே.

வ-று. தோடவிழ்தார் யானுந் தொடர அவனும்என்
பாடகச் சீறடியின் மேற்பணிய—நாடகமா
வைகிய கங்குல் தலைவரின்
உய்குவென் உலகத்து அளியேன் யானே. 10

நெஞ்சொடு மெலிதல்:—

அஞ்சொல் அஞ்சி அல்லிருட் செலீஇய
நெஞ்சொடு புகன்ற நிலையுரைத் தன்று.

வ-று. மல்லாடு தோளான் அளியவாய் மாலிருட்கண்
செல்லா மொழிக செலவென்பாய்—நில்லாய்
புனையிழை இழந்தப் பூசல்
நினையினும் நினைதியோ வாழிஎன் நெஞ்சே. 11

இதுவுமது:—

வரிவளை. நெகிழ்த்தோன் முன்செல வலித்தேன்
அரிவையர் அறிகென வுரைப்பினும் அதுவே.

வ-று நல்வளை யேக நலந்தொலைவு காட்டிய
செல்லல் வலித்தேனச் செம்மல்முன்பு—இல்லாத
வம்ப வுரையொடு மயங்கிய
வம்பற் பெண்டிரும் அறைகளம் அலரே. 12

பன்னிரண்டாவது

பெருந்திணைப் படலம்

பெண்பாற்கூற்று

சூத்திரம். 16

வேட்கைமுந் துறுத்தல் பின்னிலை முயறல்
பிரிவிடை யாற்றல் வரவெதிர்ந் திருத்தல்
வாராமைக் கழிதல் இரவுத்தலைச் சேறல்
இல்லவை நகுதல் புலவியுட் புலம்பல்
பொழுதுகண் டிரங்கல் பரத்தையை யேசல்
கண்டுகண் சிவத்தல் காதலிற் களித்தல்
கொண்டகம் புகுதல் கூட்டத்துக் குழைதல்
ஊடலுள் நெகிழ்தல் உரைகேட்டு நயத்தல்
பாடகச் சீறடி பணிந்தபின் இரங்கல்
பள்ளிமிசைத் தொடர்தல் செல்கென விடுத்தலென
ஒன்பதிற் றிரட்டியோ டொன்றும் உளப்படப்
பெண்பாற் கூற்றுப் பெருந்திணைப் பால.

வேட்கைமுந்துறுத்தல்:—

கையொளிர் வேலவன் கடவக் காம
மொய்வளைத் தோளி முந்துற மொழிந்தன்று.

வ-று. எழுதெழின் மார்பம் எனக்குரித் தாகென்று
அழுதழுது வைகலும் ஆற்றேன்—தொழுதிரப்பல்
வல்லியம் அன்ன வயவேலோய் வாழ்கென
அல்லியந்தார் நல்கல் அறம். 1

பின்னிலைமுயறல்:—

முன்னிழந்த நலனைசைஇப்
பின்னிலை மலிந்தன்று.

வ-று. மற்கொண்ட திண்தோள் மறவேல் நெடுந்தகை
தற்கண்டு மாமைத் தகையிழந்த—எற்காணப்
பெய்களி யானைப் பிணரெருத்திற் கண்டியான்
கைதொழுதேன் தான்கண் டிலன். 2

பிரிவிடையாற்றல்:—

இறைவளை நெகிழ இன்னாது இரங்கிப்
பிறைநுதல் மடந்தை பிரிவிடை யாற்றின்று.

வ-று. ஓடுக கோல்வளையும் ஊரும் அலரறைக
தோடவிழ் தாழை துறைகமழக்—கோடுடைய
பூங்கானல் சேர்ப்பன் புலம்புகொள் மான்மாலை
நீங்கானென் நெஞ்சகத்துள் நின்று. 3

வரவெதிர்ந்திருத்தல்:—

முகைபுரை முறுவல் முள்ளெயிற்று அரிவை
வகைபுனை வளமனை வரவெதிர்ந் தன்று.

வ-று. காம நெடுங்கடல் நீந்துங்கால் கைபுணைந்த
பூமலி சேக்கைப் புணைவேண்டி—நீமலிந்து
செல்லாய் சிலம்பன் வருதற்குச் சிந்தியாய்
எல்லாத நெஞ்சம் எதிர். 4

வாராமைக்கழிதல்:—

நெடுவேய்த் தோளி நிமித்தம் வேறுபட
வடிவேல் அண்ணல் வாராமைக் கழிந்தன்று.

வ-று. நுடங்கருவி ஆர்த்திழியும் நோக்கருஞ் சாரல்
இடங்கழி மான்மாலை எல்லைத்—தடம்பெருங்கண்

தாரார மார்பன் தமியேன் உயிர்தளர
வாரான்கொல் ஆடும் வலம். 5

இரவுத்தலைச்சேறல்:—

காண்டல் வேட்கையொடு கனையிருள் நடுநாள்
மாண்ட சாயன் மனையிறந் தன்று.

வ-று. பணையா அறைமுழங்கும் பாயருவி நாடன்
பிணையார மார்பம் பிணையத்—துணையாய்க்
கழிகாமம் உய்ப்பக் கனையிருள்கண் செல்கேன்
வழிகாண மின்னுக வான். 6

இல்லவைநகுதல்:—

இல்லவை சொல்லி இலங்கெயிற்று அரிவை
நல்வயல் ஊரனை நகைமிகுத் தன்று.

வ-று. முற்று முலையார் முயங்க இதழ்குழைந்த
நற்றார் அகல நகைதரலின்—நற்றார்
கலவேம் எனநேர்ந்துங் காஞ்சிநல் ஊர
புலவேம் புலத்தல் அரிது. 7

புலவியுட்புலம்பல்:—

நலவளை மடந்தை நற்றார் பரிந்து
புலவி யாற்றாள் புலம்புற் றன்று.

வ-று. ஓங்கிய வேலான் பணியவும் ஒள்ளிழை
தாங்காள் வரைமார்பில் தார்பரிந்து—ஆங்கே
அடும்படர் மூழ்கி அமைமென்தோள் வாட
நெடும்பெருங்கண் நீந்தின நீர். 8

பொழுதுகண்டிரங்கல்:—

நிற்றல் ஆற்றாது நெடிதுயிர்த்து அலமரும்
பொற்றொடி அரிவை பொழுதுகண்டு இரங்கின்று.

வ-று. இறையே யிறந்தன வெல்வளை உண்கண்
உறையே பொழிதலும் ஓவா—நிறையைப்
பருகாப் பகல்கரந்த பையுள்கூர் மாலை
உருகா வுயங்கும் உயிர். 9

பரத்தையை யேசல்:—

அணிவயல் ஊரனொ டப்புவிழ அமரும்
பணிமொழி அரிவை பரத்தையை யேசின்று.

வ-று. யாமுயங்கு மென்முலையால் யாணர் வயலூரன்
தேமுயங்கும் பைந்தார் திரைமுயங்க—யாமுயங்க
வெவ்வயர் சேரி இரவும் இமைபொருந்தாக்
கவ்வை கருதிற் கடை. 10

கண்டுகண் சிவத்தல்:—

உறுவரை மார்பன் ஒள்ளிணர் நறுந்தார்
கறுவொடு மயக்கிக் கண்சிவந் தன்று.

வ-று. கூடிய கொண்கன் குறுகக் கொடிமார்பில்
ஆடிய சாந்தின் அணிதொடர்ந்து—வாடிய
தார்க்குவளை கண்டு தரியா இவண்முகத்த
கார்க்குவளை காலுங் கனல். 11

காதலிற்க ளித்தல்:—

மைவரை நாடன் மார்பகம் பொருந்திக்
கைவிடல் அறியாக் காதலிற் களித்தன்று.

வ-று. காதல் பெருகிக் களிசெய்ய அக்களியால்
கோதையுந் தாரும் இடைகுழைய—மாதர்
கலந்தாள் கலந்து கடைக்கண்ணால் கங்குல்
புலந்தாள் புலரியம் போது. 12

கொண்டகம்புகுதல்:—

காதல் பெருகக் கணவனைக் கண்ணுற்றுக்
கோதையாற் பிணித்துக் கொண்டகம் புக்கன்று.

வ-று. கண்டு களிற்றுக் கயல்உண்கண் நீர்மல்கக்
கொண்டகம் புக்காள் கொடியன்னாள்—வண்டினங்
காலையாழ் செய்யுங் கருவரை நாடனை
மாலையால் மார்பம் பிணித்து. 13

கூட்டத்துக் குழைதல்:—

பெய்தார் அகலம் பிரிதல் ஆற்றுக்
கொய்தழை அல்குல் கூட்டத்துக் குழைந்தன்று.

வ-று. மயங்கி மகிழ்பெருக மால்வரை மார்பில்
தயங்கு புனலூரன் தண்தார்—முயங்கியும்
பேதை புலம்பப் பிரிதியோ நீயென்னுங்
கோதைசூழ் கொம்பில் குழைந்து. 14

ஊடலுள் நெகிழ்தல்:—

நள்ளிருள் மாலை நடுங்கஞர் நலிய
வெள்வளைத் தோளி ஊடலுள் நெகிழ்ந்தன்று.

வ-று. தெரிவின்றி ஊடத் தெரிந்துநங் கேள்வர்
பிரிவின்றி நல்கினும் பேணாய்—திரிவின்றித்
துஞ்சேம் எனமொழிதி தூங்கிருள் மான்மாலை
நெஞ்சே யுடைய நிறை. 15

உரைகேட்டுநயத்தல்:—

தூயரொடு வைகிய சூழ்வளைத் தோளி
உயர்வரை நாடன் உரைகேட்டு நயந்தன்று.

வ-று. ஆழ விடுமோ அலரொடு வைகினுந்
தாழ்குரல் ஏனத் தலைக்கொண்ட—.....

விரையால் கமழும் விறல்மலை நாடன்
உரையால் தளிர்க்கும் உயிர். 16

பாடகச்சீறடி பணிந்தபின் இரங்கல்:—

கோடுயர் வெற்பன் கூப்பிய கையொடு
பாடகச் சீறடி பணிந்தபின் இரங்கின்று.

வ-று. அணிவரு பூஞ்சிலம்பு ஆர்க்கும் அடிமேல்
மணிவரை மார்பன் மயங்கிப்—பணியவும்
வற்கென்ற நெஞ்சம் வணங்காய் சிறுவரை
நிற்கென்றி வாழியர் நீ. 17

பள்ளிமிசைத் தொடர்தல்:—

மாயிருங் கங்குல் மாமலை நாடனைப்
பாயல் நீவிப் பள்ளிமிசைத் தொடர்ந்தன்று.

வ-று. யானை தொடருங் கொடிபோல யானுன்னைத்
தானை தொடரவும் போதியோ—மானை
மயக்கரிய உண்கண் மடந்தைதோள் உள்ளி
இயக்கருஞ் சோலை இரா. 18

செல்கென விடுத்தல்:—

பாயிருள் கணவனைப் படர்ச்சி நோக்கிச்
சேயிழை அரிவை செல்கென விடுத்தன்று.

வ-று. விலங்குநர் ஈங்கில்லை வெல்வேலோய் சென்றீ
இலங்கிழை எவ்வ நலியக்—கலங்கிக்
குறியுள் வருந்தாமைக் குன்றுசூழ் சோலை
நெறியுள் விரிக நிலா. 19

—

இருபாற் பெருந்திணை

சூத்திரம் 17

சீர்செல அழுங்கல் செழுமடல் ஊர்தல்
தூதிடை யாடல் துயரவற் குரைத்தல்
கண்டுகை சோர்தல் பருவ மயங்கல்
ஆண்பாற் கிளவி பெண்பாற் கிளவி
தேங்கமழ் கூந்தல் தெரிவை வெறியாட்டு
அரிவைக் கவடுணை பாண்வர உரைத்தல்
பரிபுரச் சீறடிப் பரத்தை கூறல்
விறலி கேட்பத் தோழி கூறல்
வெள்வளை விறலி தோழிக்கு விளம்பல்
பரத்தை வாயில் பாங்கிகண் டுரைத்தல்
பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல்
குற்றிசை யேனைக் குறுங்கலி யுளப்பட
ஒத்த பண்பில் ஒன்று தலையிட்ட
ஈரெண் கிளவியும் பெருந்திணைப் பால.

செலவழுங்கல்:—

நிலவுவேல் நெடுந்தகை நீள்கழை ஆற்றிடைச்
செலவுமுன் வலித்துச் செலவழுங் கின்று.

வ-று. நடுங்கி நறுநுதலாள் நன்னலம் பீர்பூப்ப
ஒடுங்கி உயங்கல் ஒழியக்—கடுங்கணை
வில்லேர் உழவர் விடரோங்கு மாமலைச்
செல்லேம் ஒழிக செலவு. 1

மடலூர்தல்:—

ஒன்றல்ல பலபாடி
மன்றிடை மடலூர்ந்தன்று.

வ-று. இன்றிப் படரோர்டி யானுழப்ப ஐங்கணையான்
வென்றிப் பதாகை எடுத்தானும்—மன்றில்
தனிமடமான் நோக்கி தகைநலம் பாராட்டிக்
குனிமடல்மாப் பண்ணிமேல் கொண்டு. 2

தூதிடையாடல்:—

ஊழி மாலை உறுதுயர் நோக்கித்
தோழி நீங்காள் தூதிடை யாடின்று.

வ-று. வள்வாய்ந்து பண்ணுக திண்தேர் வடிக்கண்ணாள்
ஒள்வாள்போல் மாலை உயல்வேண்டின்—கள்வாய்ந்த
தாதொடு வண்டிமிருந் தாமரை மார்ப
தூதொடு வந்தேன் தொழ. 3

துயரவற்குரைத்தல்:—

மான்ற மாலை மயிலியல் வருத்தந்
தோன்றக் கூறித் துயரவற் குரைத்தன்று.

வ-று. உள்ளத் தவலம் பெருக ஒளிவேலோய்
எள்ளத் துணிந்த இருள்மாலை—வெள்ளத்துள்
தண்தார் அகலந் தழூஉப்புணையா நீநல்கில்
உண்டாம் என்தோழிக்கு உயிர். 4

கண்டுகைசோர்தல்:—

போதார் கூந்தல் பொலந்தொடி அரிவை
காதல் கைம்மிகக் கண்டுகை சோர்ந்தன்று.

வ-று. ஆம்பல் நுடங்கும் அணிவளையும் ஏகின
கூம்பல் மறந்த கொழுங்கயற்கண்—காம்பின்
எழில்வாய்ந்த தோளி எவனும்கொல் கானல்
பொழிலெல்லாம் ஈயும் புலம்பு. 5

பருவமயங்கல்:—

உருவ வால்வளை உயங்கத் தோழி
பருவம் மயங்கிப் படருழந் தன்று.

வ-று. பெரும்பணை மென்றோள் பிரிந்தார்எம் உள்ளி
வரும்பருவம் அன்றுகொல் ஆங்கொல்—சுரும்பிமிரும்
பூமலி கொன்றைப் புறவெலாம் பொன்மலரும்
மாமயிலும் ஆலும் மலை. 6

இதுவுமது:—

ஆங்கவர் கூறிய பருவம் அன்றெனத்
தேங்கமழ் கோதை தெளிதலும் அதுவே.

வ-று. பொறிமயில் ஆலின பொங்கர் எழிலி
சிறுதுவலை சிந்தின சிந்த—நறிய
பவர்முல்லை தோன்றி பரியாமல் ஈன்ற
அவர்வருங் காலம்ஈ தன்று. 7

ஆண்பாற்கிளவி:—

காமுறு காமந் தலைபரிந் தேங்கி
ஏமுற் றிருந்த இறைவன் உரைத்தன்று.

வ-று. கயற்கூடு வாள்முகத்தாள் கண்ணிய நெஞ்சம் 1
முயற்கூடு முன்னதாக் காணின்—உயல்கூடும்
காணா மரபில் கடும்பகலுங் கங்குலும்
நாணாளும் ஏயா நகை. 8

பெண்பாற்கிளவி:—

வெள்வளை நெகிழவும் எம்முள் ளார்த
கள்வனைக் காணா திவ்வூர்எனக் கிளந்தன்று.

வ-று. வானத் தியலும் மதியகத்து வைகலும்
கானத் தியலும் முயல்காணாந்—தானத்தின்
ஒள்வளை யோடவும் உள்ளான் மறைந்துறையுங்
கள்வனைக் காணாதிவ் வூர். 9

வெறியாட்டு:—

தேங்கமழ் கோதை செம்மல் அளிநினைந்து
ஆங்கந் நிலைமை ஆய்அறி யாமை
வேங்கையஞ் சிலம்பற்கு வெறியா டின்று.

வ-று. வெய்ய நெடிதுயிரா வெற்பன் அளிநினையா
வைய நனிநீங்க வாடினாள்—மையல்
அயன்மனைப் பெண்டிரோ டன்னைசொல் அஞ்சி
வியன்மனையுள் ஆடும் வெறி. 10

பாணவர வுரைத்தல்:—

மாணிழைக்கு வயலூரன்
பாணவரவு பாங்கிமொழிந்தன்று.

வ-று. அஞ்சொற் பெரும்பணைத்தோள் ஆயிழையாய் தாநொடியும்
வஞ்சந் தெரியா மருள்மாலை—எஞ்சேரிப்
பண்ணியல் யாழொடு பாணனார் வந்தாரால்
எண்ணியதென் கொலோ ஈங்கு. 11

பரத்தைகூறல்:—

தேங்கமழ் சிலம்பன் தார்எமக் கெளிதெனப்
பாங்கவர் கேட்பப் பரத்தை மொழிந்தன்று.

வ-று. பலவுரைத்துக் கூத்தாடிப் பல்வயல் ஊரன்
நிலவுரைக்கும் பூணவர் சேரிச்—செலவுரைத்து
வெங்கட் களியால் விறலி விழாக்கொள்ளல்
எங்கட்கு அவன்தார் எளிது. 12

விறலிகேட்பத் தோழிகூறல்:—

பேணிய பிறர்முயக் காரமுது அவற்கெனப்
பாணன் விறலிக்குப் பாங்கி மொழிந்தன்று.

வ-று. அரும்பிற்கும் உண்டோ அலரது நாற்றம்
பெருந்தோள் விறலி பிணங்கல்—சுரும்போடு
அதிரும் புனலூர்க்கு ஆரமிர்தம் அன்றே
முதிரும் முலையார் முயக்கு. 13

விறலி தோழிக்கு விளம்பல்:—

ஆங்கவன் மூப்பவர்க்கு அருங்களி தருமெனப்
பாங்கி கேட்ப விறலி பகர்ந்தன்று.

வ-று. உளைத்தவர் கூறும் உரையெல்லா நிற்க
முளைத்த முறுவலார்க் கெல்லாம்—விளைத்த
பழங்கள் அனைத்தாய்ப் படுகளி செய்யும்
முழங்கும் புனலூரன் மூப்பு. 14

பரத்தைவாயில் பாங்கிகண் டுரைத்தல்:—

உம்மில் அரிவை யுரைத்த மொழியொழிய
எம்மில் வலவனுந் தேரும் வருமெனப்
பரத்தை வாயிற்குப் பாங்கி பகர்ந்தன்று.

வ-று. மாணலங் கொள்ளும் மகிழ்நன் தனக்குமேல்
பேணலம் பெண்மை யொழிகென்பார்—காணக்
கலவ மயிலன்ன காரிகையார் சேரி
அலவ நெடுந்தேர் வரும். 15

பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல்:—

மற்றவர் சேரியுள் மைந்தன் உறைந்தமை
இற்றென விறலி எடுத்துரைத் தன்று.

வ-று. தண்தார் அணியவாந் தையலார் சேரியுள்
வண்டார் வயலூரன் வைகினமை—உண்டால்
அறியேன் அடியுறை ஆயிழையால் பெற்றேன்
சிறியேன் பெரிய சிறப்பு. 16

குற்றிசை:—

பொற்றார் அகலம் புல்லிய மகளிர்க்
கற்றுங் கொழுகா தறங்கண் மாறின்று.

வ-று. கரிய பெருந்தடங்கண் வெள்வளைக் கையாளை
மரிய கழிகேண்மை மைந்த—தெரியின்
விளிந்தாங் கொழியினும் விட்டகலார் தம்மைத்
தெளிந்தாரில் தீர்வது தீது. 17

குறுங்கலி:—

நாறிருங் கூந்தல் மகளிரை நயப்ப
வேறுபடு வேட்கை வீயக்கூ றின்று.

வ-று. பண்அவாந் தீஞ்சொற் பவளத் துவர்ச்செவ்வாய்ப்
பெண்அவாம் பேரல்குல் பெய்வளை—கண்ணவாம்
நன்னலம் பீர்பூப்ப நல்கார் விடுவதோ
தொன்னலம் உண்டார் தொடர்பு. 18

ஒழிபு

சூத்திரம் 18

பாடாண் பகுதியுட் தொல்காப் பியமுதற்
கோடா மரபிற் குணனொடு நிலைஇக்
கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்
விடுத்தல் அறியா விறல்புரி வாகையுள்
வாணிக வென்றியும் மல்ல வென்றியும்
நீள்நெறி யுழவன் நிலனுழு வென்றியும்
இகல்புரி யேறொடு கோழியும் எதிர்வன்
தகருடன் யானை தணப்பில்வெம் பூழொடு
சிவல்கிளி பூவை செழும்பரி தேர்யாழ்
இவர்தரு சூதிடை ஆடல் பாடல்
பிடியென் கின்ற பெரும்பெயர் வென்றியோடு
உடையன பிறவும் உளப்படத் தொகைஇ
மெய்யின் ஆர்தமிழ் வெண்பா மாலையுள்
ஐயன் ஆரிதன் அமர்ந்துரைத் தனவே.

கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்:—

வ-று. சீர்மிகு நல்லிசை பாடிச் செலவயர்தும்
கார்முகில் அன்னார் கடைநோக்கிப்—போர்மிகு
மண்கொண்ட வேல்மற மன்னரே யாயினும்
வெண்கொண்டல் அன்னாரை விட்டு. 1

வாணிகவென்றி:—

வ-று. காடுங் கடுந்திரை நீர்ச்சுழியுங் கண்ணஞ்சான்
சாடுங் கலனும் பலஇயக்கி—நீடும்

பலிசையால் பண்டம் பகர்வான் பரியான்
கலிகையால் நீக்கல் கடன். 2

மல்வென்றி:—

வ-று. கண்டான் மலைந்தான் கதிர்வானங் காட்டியே
கொண்டான் பதாகை மறமல்லன்—வண்டார்க்கும்
மாலை துயலும் அருவிய மாமலை
போலுந் திரள்தோள் புடைத்து. 3

உழவன்வென்றி:—

வ-று. மண்பத நோக்கி மலிவயலும் புன்செய்யும்
கண்பட ஏர்பூட்டிக் காலத்தால்—எண்பதனுந்
தத்துநீர் ஆர்க்குங் கடல்வேலித் தாயர்போல்
வித்தித் தருவான் விளைவு. 4

ஏறுகோள்வென்றி:—

வ—று. குடைவரை ஏந்தியநங் கோவலனே கொண்டான்
அடையவிழ் பூங்கோதை அஞ்சல்—விடையாவம்
மன்றங் கறங்க மயங்கப் பறைபடுத்து
இன்று நமர்விட்ட ஏறு. 5

கோழிவென்றி:—

வ-று. பாய்ந்தும் எறிந்தும் படிந்தும் பலகாலும்
காய்ந்தும்வாய்க் கொண்டுங் கடுஞ்சேவல்—ஆய்ந்து
நிறங்கண்டு வித்தகர் நேர்விட்ட கோழிப்
புறங்கண்டுந் தான்வருமே போர்க்கு. 6

தகர்வென்றி:—

வ-று. அருகோடி நீங்காது அணைதலும் இன்றித்
திரிகோட்ட மாவிரியச் சிறிப்—பொருகளம்

புக்கு மயங்கப் பொருது புறவாயை
நக்குமா நல்ல தகர். 7

யானைவென்றி:—

வ-று. கஞ்சுகம் வாய்ந்த கவளந்தன் கைக்கொள்ளும்
குஞ்சரம் வென்ற கொலைவேழம்—துஞ்சாது
உழலையும் பாய்ந்திறுத்து ஓடாது தான்தன்
நிழலையுந் தான்சுளிக்கும் நின்று. 8

பூழ்வென்றி:—

வ-று. சொல்லுஞ் சுவட்டவர் சொல்லுக சொல்லுங்கால்
சொல்லும் பலவுள சொன்னபின்—வெல்லும்
நலம்வர நாடி நடுங்காது நூற்கண்
புலவரால் ஆய்ந்தமைத்த பூழ். 9

சிவல்வென்றி:—

வ-று. ஒட்டியார் எல்லாம் உணரார் புடைத்தபின்
விட்டோட வேண்டுமோ தண்ணுமை—விட்ட
சுவடேற்கு மாயின் சுடரிழாய் சோர்ந்து
கவடேற்க ஓடுங் களத்து. 10

கிளிவென்றி:—

வ-று. இலநாம் உரைப்பதன்கண் எல்வளை நாணப்
பலநாள் பணிபதமுங் கூறிச்—சிலநாளுள்
பொங்கரி உண்கண்ணாள் பூவைக்கு மாறாகப்
பைங்கிளியைக் கற்பித்தாள் பாட்டு. 11

பூவைவென்றி:—

வ-று. புரிவொடு நாவினுற் பூவை புணர்த்துப்
பெரிய அரியவை பேசுந்—தெரிவளை

வெள்ளெயிற்றுச் செவ்வாய் வரியுண் கணாள்வளர்த்த
கிள்ளை கிளந்தவைகேண் டிட்டு. 12

குதிரைவென்றி:—

வ-று. ஐந்து கதியும் பதினெட்டுச் சாரிபையும்
கந்து மறமுங் கறங்குளைமா—முந்துற
மேல்கொண் டவைசெலீஇ வெல்வேலான் மேம்
வேல்கொண்ட கண்ணாளை மீட்டு. [பாட்டான்

தேர்வென்றி:—

வ-று. ஒலிமணித் திண்தேர் உடையாரை வெல்லும்
கலிமணித் திண்தேரால் காளை—கலிமாப்
பலவுடன் பூட்டிப் படிசிறந் தைந்து
செலவொடு மண்டிலஞ் சென்று. 14

யாழ்வென்றி:—

வ-று. பாலை படுமலை பண்ணி யதன்கூட்டம்
கோலஞ்செய் சீறியாழ் கொண்டபின்—வேலைச்
சுவையெல்லாந் தோன்ற எழீஇயினாள் சூழ்ந்த
அவையெல்லாம் ஆமாக்கி அணங்கு. 15

சூதுவென்றி:—

வ-று. கழகத் தியலுங் கவற்றின் நிலையும்
அழகத் திருநுதலாள் ஆய்ந்து—புழ்கத்து
பாய வகையாற் பணிதம் பலவென்றாள்
ஆய வகையும் அறிந்து. 16

ஆடல்வென்றி:—

வ-று. கைகால் புருவங்கண் பாணி நடைதூக்குக்
கொய்பூங் கொம்பன்னாள் குறிக்கொண்டு—பெய்பூப்

படுகளி வண்டார்ப்பப் பயில்வளை நின்றாடுந்
தொடுகழல் மன்னன் துடி.

பாடல்வென்றி:—

வ-று. வண்டுறையுங் கூந்தல் வடிக்கண்ணாள் பாடினாள்
வெண்டுறையுஞ் செந்துறையும் வேற்றுமையாக்- [கண்டறியக்
கிந்நரம் போலக் கிளையமைந்த தீந்தொடையாழ்
அந்நரம்பும் அச்சுவையும் ஆய்ந்து. 18

பிடிவென்றி:—

வ-று. குவளை நெடுந்தடங்கண் கூரெயிற்றுச் செவ்வாய்
அவளொடு மாமையொப் பான—இவளொடு
பாணியுந் தூக்கு நடையும் பெயராமைப்
பேணிப் பெயர்ந்தாள் பிடி. 19

P31, E
N27

சூத்திரம் 19

வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
உட்குடை உழிஞை நொச்சி தும்பை யென்று
இத்திறம் ஏழும் புறமென மொழிப
வாகை பாடாண் பொதுவியற் றிணையெனப்
போகிய மூன்றும் புறப்புறமாகும்.

புறப்பொருள் வெண்பாமாலை

முற்றும்.

59397